www.eelamview.com

# விடுதலைப்புலிகள்

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வமான ஏடு குரல் 10 ஜுலை 1986 அன்பளிப்பு ரூ 2.

# முப்படைத் தாக்குதலை முறியடித்தோம்

தமிழீழ தேசிய விடுதலைப்போராட்டத்தில் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருப்புமுனையாக அமையப்பெற்றது யாழ்குடா நாட்டு யுத்தம். இந்த யுத்தத்தில் ஆயிரக்கணக்கான சிங்கள ஆயுதப் படையினர் தமிழீழ விடுதலைப் புலிகளின் வீரர்களை நேருக்கு நேரே களத்தில் சந்தித்தனர். குடாவின் பல முனைகளில் பயங்கரமான சண்டைகள் மூண்டன. மூன்று நாட்களாக தொடர்ந்து நடைபெற்ற இந்த யுத்தத்தில் விடுதலைப் புலிகளின் கெரில்லா அணிகள் வியக்கத்தக்க முறையில் வீராவேசத்துடன் போரிட்டன. புலிப் படையின் அபாரமான போர்த் தந்திரம், அஞ்சா நெஞ்சம் படைத்த உறுதி, வீரம்செறிந்த துணிவிற்கு ஈடுகொடுக்க முடியாமல் சிங்களக் கூலிப்பட்டாளம் இறுதியில் பின்வாங்கியது. அகில உலகமும் வியக்கத்தக்க முறையில் எமது இயக்க வீரர்கள் சிங்கள ஆயுதப் படைகளை களத்தில் தோற்கடித்து வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இராணுவ சாதனையை நிலைநாட்டினர்.

தரை, ஆகாயம், கடல் மார்க்கமாக மேற்கொள்ளப்பட்ட இந்தப் பாரிய படையெடுப்பில் மூவாயிரத்திற்கும் அதிகமான சிங்களத் துருப்புகள் பங்குபெற்றன. போர்விமானங்கள், ஹெலிகாப்டர்கள், டாங்கிகள், கவச வாகனங்கள், பீரங்கிகள், சகிதம் நவீன ஆயுதங்களுடன் கிளம்பிய சிங்கள இராணுவ அணிகளை எதிர்த்து நின்று போரிட்டு யாழ் மாவட்ட தமிழ் மக்களை பெரும் இனஅழிவிலிருந்து பாதுகாத்த பெருமை எமது விடுதலை வீரர்களையே சாரும். விடுதலைப் புலிகள் இயக்கமே தமிழீழ மக்களின் அசைக்கமுடியாத பாதுகாப்பு அரண் என்பதை இந்த மகத்தான போர்ச் சாதனை நிரூபித்துள்ளது. புலிகளின் போர்த்திறனை சர்வதேச பத்திரிகை உலகம் புகழ்ந்துரைத்துள்ளமை கொழும்பிலுள்ள அரச பயங்கரவாத ஆட்சிபீடத்தை நிலைகுலையச் செய்துள்ளது.

யாழ்ப்பாணக்குடாநாடு விடுதலைப்புலிகளின் 'விடுவிக்கப்பட்ட பிரதேசம்' போலியங்கியதும் அங்குள்ள இராணுவ முகாம்கள் எமது வீரர்களின் முற்றுகையின்கீழ் சூழப்பட்டிருந்ததும் சிங்கள அரசுக்கு ஒரு சவாலாக இருந்துவந்தது. புலிகளின் கோட்டையாக விளங்கிய யாழ்ப்பாணக்குடாமீது படையெடுப்பு நடத்தி, புலிப் படை வீரர்களை அழித்து, அப்பிராந்தியத்தை சிங்கள இராணுவ ஆட்சியின்கீழ் கொண்டுவரவேண்டுமென்பது ஜெயவர்த்தனாவின் நீண்டகாலத் திட்டமாக இருந்தது. இந்தத் திட்டத்தை செயல்படுத்தும் நோக்கில் பெரியதொரு படையெடுப்பிற்கான ஆயத்தங்கள் நடைபெற்றன. நவீனரக ஆயுதங்களுடன் ஆயிரக்கணக்கில் சிங்களத் துருப்புகள் வடக்கை நோக்கி நகர்த்தப்பட்டன. யாழ்குடாவைச் சூழ கடற்படைகள் பலப்படுத்தப்பட்டன. கப்பல் மூலம் கடற்படை வீரர்கள் கடற்படைத் தளங்களில் இறக்கப்பட்டனர். குண்டுவீச்சு விமானங்கள், ஹெலிகாப்டர்கள் யாழ்குடாநாட்டில் குவிக்கப்பட்டன. தரையாலும், கடலாலும், ஆகாயத்தாலும் முப்படைத் தாக்குதலுக்கான ஆயத்தங்கள் நடைபெற்றன.

ஒரு பெரிய படையெடுப்பிற்கான ஆயத்தங்கள் நடைபெறுவதை முன்கூட்டியே அறிந்து எமது இயக்கம் தமிழ் மக்களை எச்சரித்ததுடன் படையெடுப்பை முறியடிப்பதற்கான போர் ஆயத்தங்களையும் மேற்கொண்டது. பொதுமக்களும் போராளிகளுமாகச் சேர்ந்து பிரதான வீதிகளுக்கு கண்ணிவெடி வைத்தல், அகழிகள் தோண்டுதல், வீதித்தடைகள் நிறுவுதல், மண்மூடைப் பாதுகாப்பு அரண்களை அமைத்தல் போன்ற நடவடிக்கைகளில் இறங்கினர். இதற்கிடையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரச்சாரப் பிரிவினர் குண்டுவீச்சிலிருந்து பாதுகாப்பு பெறுவது சம்பந்தமான தொலைக்காட்சிப் படம் ஒன்றையும் மக்களுக்கு காண்பித்தனர். இவ்விதமாக எமது விடுதலை இயக்கம் யாழ்குடாநாட்டு மக்களை இந்தப் படையெடுப்பை எதிர்கொள்ளத் தயார் நிலைப்படுத்தியது.

## முப்படைகளின் படையெடுப்பு

மே 17ந் திகதி காலை, யாழ்ப்பாண நகரைப் கைப்பற்றி, யாழ்குடாநாட்டைச் சுற்றிவளைத்து முற்றுகையிடும் திட்டத்தோடு சிங்கள முப்படைகள் பிரமாண்டமான தாக்குதலை மேற்கொண்டனர். யாழ்ப்பாண கோட்டை, பலாலி, ஆனையிறவு, கிளிநொச்சி, வல்வெட்டித்துறை இராணுவ முகாம்களிலிருந்தும் காரைநகர் கடற்படைத் தளத்திலிருந்தும் ஆயிரக்கணக்கான துருப்புகள் இந்தப் படையெடுப்பில் ஈடுபட்டனர். படையெடுப்பு ஆரம்பமான அதே கணத்தில் தயார்நிலையில் வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் கெரில்லா அணிகள் இராணுவத்தினரைப் பல முனைகளில் தடுத்துநிறுத்தி பயங்கரமான சண்டையில் இறங்கினர். யாழ்குடாநாடு முழுவதுமே ஒரு யுத்தகளமாக மாறியது.

## ஆனையிறவு முகாமிலிருந்து...

17ந் திகதி காலை 9 மணியளவில் 20 கவச வாகனங்களில் 200க்கும் அதிகமான இராணுவத்தினர் யாழ் நகரை நோக்கிப் புறப்பட்டபொழுது எமது கெரில்லா வீரர்கள் இந்த இராணுவ அணியை இயக்கச்சி என்னுமிடத்தில் தடுத்துநிறுத்தி வீராவேசத்துடன் போரிட்டனர். நான்கு மணிநேரமாக நடைபெற்ற இக் கடும் சண்டையில் 5 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். எதிர்த்தாக்குதலை சமாளிக்க முடியாது இராணுவத்தினர் முகாமிற்குள் பின்வாங்கினர்.

முகாமிற்குள் திரும்பிய இராணுவத்தினர் ஆட்பலத்தையும் ஆயுத பலத்தையும் இரு மடங்காகக்கூட்டி 40 கவச வாகனங்களுடன் 400 துருப்புகள் சகிதம் மீண்டும் யாழ்நகர் நோக்கி படையெடுத்தனர்.

இந்த இராணுவ அணியை எமது விடுதலை வீரர்கள் கொடிகாமத்திற்கு அண்மையில்வைத்து சுற்றிவளைத்து கடும் சமரில் இறங்கினர். 24 மணிநேரமாக







புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.eelamview.com

www.eelamview.com



# தமிழீழமும் இந்திய வைதீக மார்க்சீய வாதிகளும்

ஒரு தேசிய சமூகத்தின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் முன்னெடுக்கப்படும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் அதன் புரட்சிகரமான ஆயுதப் போராட்ட வடிவத்தையும் பிற்போக்கானதென சில இந்திய இடதுசாரி இயக்கங்கள் கண்டன விமர்சனம் செய்துவருவது எமக்கு கவலை அளிக்கிறது.

'மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்' என்ற முத்திரை குத்திக்கொள்ளும் இந்தக் கம்யூனிஸ்ட்டுகள் எமது போராட்டத்தைக் கண்டித்து முன்வைக்கும் வாதம் வருமாறு :

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் குறுகிய குட்டிமுதலாளிய தேசியவாதத்தால் உந்தப்படுகிறது. இந்தப் போராட்டத்தால் சிங்களப் பாட்டாளிவர்க்கத்திற்கு விமோசனம் கிட்டப்போவதில்லை. அமெரிக்க ஏகாதிபத்தியம் இலங்கையில் நிலைகொள்ள இது வழிவகுக்கும். தனியரசுக் கோரிக்கை நாட்டை இரண்டாகக் கூறுபோடும். சிங்கள-தமிழ் பாட்டாளி வர்க்க ஒற்றுமைக்கு இடையூறானது. ஆகவே ஒட்டுமொத்தத்தில் இவ்விடுதலைப் போராட்டம் பிற்போக்கானது.

இந்த மார்க்சியவாதிகள் எமக்கு . வழங்கும் அறிவுரை வருமாறு :

சிறீலங்கா உங்களது நாடு. சிங்களவர்கள் உங்கள் சகோதரர்கள். தமிழீழக் கோரிக்கையை கைவிடுங்கள். போராட்ட இலட்சியத்தை மாற்றியமையுங்கள். வர்க்கப்போராட்டப் பாதையைத் தழுவி சிங்களப் பாட்டாளி வர்க்கத்துடன் இணைந்து அகில இலங்கைப் புரட்சிக்காக உழையுங்கள். சிறிலங்காவில் ஒரு மக்கள் சனநாயகக் குடியரசை நிறுவுவதே உங்கள் போராட்ட இலட்சியமாக இருக்கட்டும்.

இந்தக் கண்ணோட்டம் எமக்குப் புதிதானதல்ல. இலங்கையில் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக பழைய மரபு மார்க்சியவாதிகள் எழுப்பிவரும் புளித்துப்போன வாதம் இது. ஒரு தேசிய இனப் பிரச்சினையையும் அதன் வரலாற்று ரீதியான சிக்கலான பரிமாணங்களையும் வெறும் பொருள் உற்பத்தி உறவுகளில், வர்க்க உறவுகளில் நிலைநிறுத்திப் பார்க்கும், இந்த வைதீக மார்க்சியக் கண்ணோட்டம் எமது அரசியல் நிதசர்சனத்தை எந்தவகையிலும் தொட்டு நிற்கவில்லை.

ஈழத் தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு மூல காரணி முதலாளியம் அல்ல. இப்பிரச்சினை வர்க்க முரண்பாட்டினுல் தோன்றியது அல்ல. இனவாத அடிப்படையில் எழுந்த தேசிய ஒடுக்குமுறை காரணமாகவே இப்பிரச்சினை தோற்றம்கொண்டது. ஒரு பெரிய தேசிய இனம் ஒரு சிறிய தேசிய இனத்தை ஒடுக்கியதன் விளைவாகவே இரு இனங்கள் மத்தியில் முரண்பாடு முற்றியது. இதனுல் தேசிய முரண்பாடு (national contradiction) முதன்மை பெற்றது. ஆகவே இத்தேசிய பிரச்சினையில் நாம் பிரதான முரண்பாடாகக் கொள்ளவேண்டியது தேசிய முரண்பாட்டையே தவிர வர்க்க முரண்பாட்டை அல்ல.

தமிழீழ மக்கள், தமிழர்கள் என்ற அடிப்படையில் அதாவது தமிழ் இனம் என்ற அடிப்படையில் அரச ஒடுக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டனர். இந்த இனரீதியான தேசிய ஒடுக்குமுறை தாண்டவமாடும் பொழுது, இனங்கள் மத்தியில் முரண்பாடு தோன்றும்பொழுது வர்க்க ஒருமைப்பாடு சாத்தியம்ஆவதில்லை. இது யதார்த்தமான சமூக உண்மை.

கார்ல் மார்க்சும் இந்த நிலைப்பாட்டையே கொண்டிருந்தார். அயர்லாந்து தேசிய இனப்பிரச்சினையில் அவர் ஆங்கில ஐரிஷ் பாட்டாளிவர்க்க ஒற்றுமையை வலியுறுத்தவில்லை. மாறாக, அயர்லாந்து மக்களின் தேசிய விடுதலைக்கு அவர் குரல்கொடுத்தார். ஆங்கிலேயர் அயர்லாந்து மக்களை இன அடிப்படையில் ஒடுக்கிவரும்பொழுது வர்க்க ஒற்றுமை சாத்தியமாகாது என உணர்ந்துகொண்ட மார்க்ஸ், அயர்லாந்து மக்களின் தேசிய விடுதலையே ஆங்கிலப் பாட்டாளிவர்க்கத்திற்கு விடிவளிக்கும் என்ருர்.

ஆளும் வர்க்கமானது தேசிய ஒடுக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டு தொழிலாள வர்க்கத்தை இனரீதியாகப் பிளவுபடச்செய்வதன் மூலம் தனது ஆட்சியதிகாரத்தை ஸ்திரப்படுத்திக்கொள்கிறது. இதன் காரணமாகவே மார்கஸும் லெனினும் இனரீதியான தேசிய ஒடுக்குமுறை பாட்டாளிவர்க்க ஒருமைப் பாட்டிற்கு குந்தகமானது எனக் கருதினர். பேரினவாதத்திற்கும் தேசிய ஒடுக்குமுறைக்கும் எதிராகக் குரல் எழுப்பிய லெனின், ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும் என வாதாடினுர். ஒடுக்கப்படும் இனங்கள் அரசியல் சுதந்திரம் பெருதவரை பாட்டாளிவர்க்க ஒருமைப்பாடு சாத்தியமாகாது என்பது அவரது கருத்து. இந்த ரீதியில் ஒடுக்கப்படும் இனங்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்காக போராடத்தவறுவோர் உண்மையான சோசலிசவாதிகளாக இருக்க முடியாது என்கிருர் லெனின்.

ஒடுக்கப்படும் ஈழத்தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்காக நாம் போராடுகிருேம். தமிழ் மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறை நீடிக்கும்வரை தமிழ் மக்கள் அரசியல் சுதந்திரம்பெருதவரை சிங்கள-தமிழ் பாட்டாளிவர்க்க ஒருமைப்பாடு சாத்தியமாகப் போவதில்லை. பிரதான முரண்பாடான தேசிய முரண்பாடு முதலில் தீர்வுகாணப்படவேண்டும். அதற்கப்புறமே வர்க்கப் போராட்டம் சாத்தியமாகும் இதுவே எமது நிலைப்பாடு. இதுவே எமது போராட்டப் பாதை. இதனைப் பிற்போக்கான போராட்டத் திட்டம் எனக் கருதுபவர்கள் உண்மையான மார்க்சிஸ்ட்-லெனினிஸ்டுகளாக இருக்க முடியாது.

சிறிலங்கா எனப்படும் சிங்கள தேசம் எமது தாய்நாடு அல்ல. தமிழீழமே எமது தாய்ப்பூமி. புனிதமான எமது தாய் மண் எமது பிறப்புரிமை சொத்து. எமது இனத்தின் தனித்துவத்திற்கும், கட்டுக்கோப்பிற்கும் அத்திவாரமாக இருப்பது எமது தாய்ப்பூமி. எமது தாய்மண்மீது எமக்குரிய உரிமை, இறைமை மாற்றமுடியாதது.

சிங்கள மக்கள் எமது சகோதரர்கள். சுரண்டப்படும் சிங்கள விவசாய தொழிலாள வர்க்கத்தை எமது புரட்சிகரத் தோழமை சக்தியாகவே நாம் கருதுகிருேம். இப்பாட்டாளி வர்க்கத்தின் விடிவுக்காகப் போராடுவதும் எமது பிரதான இலட்சியம். தமிழீழ சுதந்திரப் போராட்டம் சிங்கள முதலாளிய இனவாத அரசுக்குத்தான் எதிரானது. இந்த அரசுக்கு முண்டுகொடுக்கும் ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிரானது. ஒடுக்கப்படும் தமிழ் இனம் முதலில் விடுதலைபெறவேண்டும். விடுதலைபெற்ற சுதந்திரத் தமிழீழம் சிங்களப் பாட்டாளிவர்க்கத்தின் புரட்சிக்கு வழிவகுக்கும் போராட்டகளமாக அமையும்.

சிங்கள ஆளும்வர்க்கத்தின் பேரினவாத சித்தாந்த மாயைக்குள் சிங்களப் பாட்டாளிகள் சிறைபட்டுக் கிடக்கும்வரை வர்க்க ஒருமைப்பாடும், வர்க்கப் போராட்டமும் அகில இலங்கைப் புரட்சியும் சாத்தியமாகப் போவதில்லை. இது நீண்ட கால நடைமுறை அரசியலில் நாம் கண்ட உண்மை. இந்த யதார்த்த புறநிலை உண்மைக்கு மாருக நாம் எமது விடுதலைப் போராட்டத்தைக் கைவிட்டு வர்க்கப் போராட்டப் பாதையை தழுவிக்கொள்வதென்பது படுமுட்டாள் தனமாகும். இதனுல் எமது இனத்தின் அழிவுக்கு மட்டுமன்றி சிங்களப் பாட்டாளிகளின் நிரந்தர அடிமைத்தனத்திற்கும் நாம் வழிவகுப்பதாக அமையும். இதனை இங்குள்ள வைதீக சித்தாந்தவாதிகள் புரிந்துகொள்வார்கள் என நம்புகிருேம்.

நாம் பிரிவினைவாதிகள் அல்லர். அன்றி ஒரு நாட்டை துண்டுபோடுவது எமது நோக்கமல்ல. நாம் எமது ஒடுக்கப்படும் மக்களின் சுதந்திரத்திற்காகப் போராடுகிருேம். எமது தாய்ப் பூமியின் இறைமையை மீட்கப் போராடுகிருேம். நாம் ஒரு தேசிய இனம் என்ற ரீதியில், இனப் படுகொலையின் விளிம்புக்குத் தள்ளப்படும் இனம் என்ற ரீதியில், எமது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்ட நாம் போராடுகிருேம், இந்த வகையில் எமது போராட்டம் நியாயமானது தர்மமானது.

தேசிய ஒடுக்குமுறை உக்கிரமடையும் சூழ்நிலையில் ஒரு தேசிய இனம் அரசியல் சுதந்திரத்திற்காகப் போராடுவது நியாயமானது மட்டுமன்றி அது ஒரு புரட்சிகரமான செயலும் கூட. சோசலிச தத்துவம் இதனை அங்கீகரிக்கவே செய்கிறது. எந்த சூழ்நிலையில் ஒரு தேசிய இனம் தனியரசுப் போராட்டத்திற்கு தள்ளப்படுகிறது என்பது பற்றி லெனின் பின்வருமாறு கூறுகிருர் :

'ஒரு பெரிய அரசால் ஏற்படும் அனுகூலங்கள் பற்றியும், பூகோளப் பொருளாதார தொடர்புகளின் நலன்கள்பற்றியும் தமது நாளாந்த அனுபவம் மூலம் மக்கள் நன்கு அறிந்திருப்பார்கள். ஆனுல் தேசிய ஒடுக்குமுறையும், தேசிய முரண்பாடும் முற்றி சகவாழ்வு சகித்துக்கொள்ள முடியாததாகி, பொருளாதார உறவுகளுக்கும் முட்டுக்கட்டை ஏற்படும் பொழுது பிரிந்துசெல்வது தவிர்க்க முடியாது. வர்க்கப் போராட்ட நலனுக்கும் அதுவே சரியான பாதை'

தமிழீழ மக்களும் இதே சூழ்நிலையில்தான் தனியரசுப் போராட்டத்திற்கு தள்ளப்பட்டார்கள். வரலாற்று ரீதியாக இது தவிர்க்கமுடியாதது. ஆகவே எமது சுதந்திரப் போராட்டத்தை இந்திய பிரிவினைவாத எழுச்சிகளுடன் ஒப்புநோக்குச் செய்வதோ, பிற்போக்கு முத்திரை குத்துவதோ மிகவும் தவறான அணுகுமுறையாகும். இதனை உண்மையான மார்க்சிய-லெனினிய அணுகுமுறை என்று சொல்லமுடியாது.

---

தொடர்ச்சியாக சண்டை நடைபெற்றது. புத்துவெட்டுவான் என்ற இடத்தில் நடைபெற்ற ஒரு மோதலில் 17 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பலர்காயமடைந்தனர். இச் சண்டையில் இரு கவச வாகனங்கள் நாசமாக்கப்பட்டன. குண்டுவிச்சு விமானங்களும் ஹெலிகாப்டர்களும் தரைப்படைக்கு உதவியாக தாக்குதல்களை மேற்கொண்டபோதும் இராணுவம் முன்னேறமுடியாது திண்டாடியது. இறுதியில் 19ந் திகதி காலை இராணுவத்தினர் பின்வாங்கி ஆனையிறவு முகாமிற்குள் தஞ்சம்புகுந்தனர்.

ஆனையிறவு முகாம் இராணுவத்தினருக்கு எதிரான சண்டையில் எமது தரப்பில் அகிலன், அங்கிள், ஜோதிரவி, ரகு ஆகிய இளம்புலிகள் வீரமரணமடைந்தனர்.

### பலாலி முகாமிலிருந்து

17ந் திகதி காலை 9 மணியளவில் 30 கவச வாகனங்களுடன் 500க்கும் அதிகமான துருப்புகளைக்கொண்ட இராணுவ அணியொன்று பலாலி இராணுவ முகாமிலிருந்து யாழ்நகர் நோக்கிப் புறப்பட்டது. முகாமிலிருந்து இராணுவத்தினர் வெளிக்கிளம்பியதும் விடுதலைப்புலி கெரில்லா அணிகள் தீவிரமான எதிர்த்தாக்குதலை மேற்கொண்டு இராணுவத்தை முன்னேறவிடாது தடுத்தனர். இரண்டு நாளாகத் தொடர்ந்து கடும் சண்டை நடைபெற்றது. மோட்டார், ராக்கட்டுகளைக்கொண்டு விடுதலைப் புலிகள் நடத்திய கடும் தாக்குதலில் ஏராளமான இராணுவத்தினர் உயிரிழந்தனர். இராணுவ கவச வாகனங்கள் பல சேதமடைந்தன. குண்டுவீச்சு விமானங்கள் உதவிக்கு அழைக்கப்பட்டபொழுதும் இராணுவத்தினரால் முன்னேறமுடியவில்லை. புலிகளின் தாக்குதலை சமாளிக்க முடியாமல் இராணுவம் முகாமிற்குள் பின்வாங்கியது. இராணுவத்தின் ஒரு பிரிவு வசாவிளான் பாடசாலை ஒன்றுக்குள் புகுந்துகொண்டது. இந்தப் பாடசாலையை எமது வீரர்கள் முற்றுகையிட்டனர்.

இந்த சண்டையில் கேசிகன் என்ற எமது இயக்க வீரர் வீரமரணமடைந்தார்.

### கோட்டை முகாமிலிருந்து...

யாழ்ப்பாணக் கோட்டை முகாமிலிருந்து 17ந் திகதி காலை 9 மணியளவில் புறப்பட்ட இராணுவத்தினர்மீது எமது வீரர்கள் கடும்தாக்குதலை மேற்கொண்டனர். பல மணிநேரம் நீடித்த இத்தாக்குதலில் இராணுவத்தினர் தரப்பில் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டது. இறுதியில் புலிகளின் கடுமையான எதிர்த்தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் இராணுவத்தினர் கோட்டைக்குள் பின்வாங்கினர்.




இதற்கிடையில் மூன்று கவச வாகனங்களில் சென்ற இராணுவ அணியினர் பண்ணைப்பாலத்தில் வைத்து எம்மவர்களால் முற்றுகையிடப்பட்டனர். 48 மணி நேரம்வரை இம்முற்றுகை நீடித்தது. இறுதியில் ஆகாயத் தாக்குதல் உதவியுடன் இந்த இராணுவத்தினர் கோட்டைக்குள் ஓடி ஒளிந்துகொண்டனர்.

19ந் திகதி காலை மீண்டும் கோட்டை முகாமிலிருந்து சிங்கள இராணுவ அணிகள் வெளிக்கிளம்ப முயற்சித்தன. ஆனுல் விடுதலைப் புலி வீரர்கள் இராணுவம் மீது கடும்தாக்குதலை நடத்தி இராணுவத்தினரைப் பின்வாங்கி ஓடச்செய்தனர். இவர்களில் 100 துருப்புகளைக்கொண்ட அணியொன்று பழைய யாழ் பொலிஸ் நிலையக் கட்டிடம் ஒன்றுக்குள் தஞ்சம் புகுந்துகொண்டது. எமது வீரர்கள் இக்கட்டிடத்தை சுற்றிவளைத்துத் தாக்கியதில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

### வல்வெட்டித்துறையில்....

வல்வெட்டித்துறை முகாமிலிருந்து 18ந் திகதியும் 19ந் திகதியும் இரு தடவைகள் வெளிக்கிளம்பிய இராணுவத்தினரை எமது வீரர்கள் தடுத்துநிறுத்தி கடும் சமர் புரிந்தனர். 18ந் திகதி இருவரும் 19ந் திகதி ஏழு பேருமாக இராணுவத்தினர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர். புலிகளின் வீராவேசத் தாக்குதலை சமாளிக்கமுடியாமல் இரு தடவையும் இராணுவம் பின்வாங்கிச் சென்று முகாமிற்குள் பதுங்கிக்கொண்டது.

19ந் திகதி காலை. இயந்திரத்துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட ஐந்து கடற்படைப் படகுகளில் ஏராளமான கடற்படையினர் வல்வெட்டித்துறைக் கரையோரம் வந்திறங்கினர். அப்பகுதியில் நிலைகொண்டிருந்த எமது கெரில்லா அணிகள் கடற்படையினர்மீது வீராவேசமான எதிர்த்தாக்குதலை மேற்கொண்டனர். ராக்கட்டுகள், மோட்டார்கள் போன்ற நவீன ரக ஆயுதங்களால் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் 10 சிங்கள கடற்படையினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர். கடற்படைப் படகு ஒன்று எமது ராக்கட் தாக்குதலுக்கு இலக்காகி கடலில் மூழ்கடிக்கப்பட்டது. மற்றெரு படகு பலத்த சேதத்திற்கு ஆளாகியது. எம்மவர்களின் கடுமையான தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது ஏனைய கடற்படையினர் பின்வாங்கிவிட்டனர்.

### ஊர்காவற்துறையில்....

17ந் திகதி காலை காரைநகர் கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படையினர் பீரங்கிப் படகுகளிலும் ஹெலிகாப்டர்களிலும் ஊர்காவற்துறையில் வந்திறங்கினர். சுமார் 200 கடற்படையினருக்கும் எமது வீரர்களுக்கும் மத்தியில் கடும்சண்டை மூண்டது. விடுதலைப் புலிகளின் எதிர்த் தாக்குதலில் பல கடற்படை வீரர்கள் கொல்லப்பட்டனர். ஒரு ஹெலிகாப்டரும் பலத்த சேதத்திற்குள்ளாகியது. 24 மணி நேர சண்டையின் பின்னர் கடற்படையினர் பின்வாங்கி காரைநகர் தளத்திற்கு சென்றனர்.

### விமானத் தாக்குதல்

முப்படைகளினதும் படையெடுப்பை விடுதலைப் புலிகளின் கெரில்லா அணிகள் வெற்றிகரமாகத் தாக்கி முறியடித்ததால் ஆத்திரமும் அவமானமும்கொண்ட சிங்கள இனவாத அரசு யாழ்ப்பாணப் பொதுமக்கள்மீது விமானத் தாக்குதல்களை கட்டவிழ்த்துவிட்டது. குண்டுவீச்சு விமானங்கள் யாழ் நகரிலும் சுற்றுப்புறக் கிராமங்களிலும் வல்வெட்டித்துறையிலும் குண்டுமாரி பொழிந்தன. குண்டுவீச்சிலிருந்து பாதுகாப்பு பெறுவதுபற்றியும் சிவில் பாதுகாப்பு முறைகள் பற்றியும் விடுதலைப் புலிகள் இயக்கம் ஏற்கனவே தீவிரப் பிரச்சாரம் மேற்கொண்டதால் பெரும் அழிவிலிருந்து மக்கள் தம்மைப் பாதுகாக்க முடிந்தது.

www.eelamview.com

www.eelamview.com



# நாற்றத்தில் மொசாட்


இலங்கையில் தமிழ்மக்கள் இனப்படுகொலை செய்யப் படுவதற்கு இஸ்ரேலின் உளவு ஸ்தாபனங்கள் பக்கபலமாகச் செயல்படுகிறது என்பது இப்போது நன்கு நிரூபணமாகி யுள்ளது. தமிழ்ச் சமூகத்தை பூண்டோடு அழிப்பதைத் திட்டமிடுவதில் சியோனிஸ பயங்கரவாதிகளும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்பதை ஜெயவர்த்தன அரசாங்கம் கையாளுகிற கொடூரமான, படுபாதகமான வழிமுறைகள் தெளிவாகக் காட்டுகின்றன. கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கை களிலும், ஆயுதப்படைகளைப் பயிற்றுவிப்பதிலும் சிறிலங்கா அரசின் பயங்கரவாதத்தையும் இன அழிப்பையும் திட்ட மிடுவதிலும் மொசாட், சின்பத் ஆகிய இஸ்ரேலின் உளவு நிறுவனங்கள் முனைப்பாக ஈடுபட்டுவருகின்றன.

பாலஸ்தீனியர்களுக்கும், இலங்கைத் தமிழர்களுக்கும் இடையில் அடிப்படையான சில ஒற்றுமைகள் உண்டு. ஜோர்தானின் மேற்குக்கரை, காஸா ஆகிய பாலஸ்தீனப் பகுதிகளில் இஸ்ரேலியர்கள் கையாண்ட பயங்கரவாத நடவடிக்கைகளின் மாதிரி வடிவங்கள் தமிழீழத்திலும் கொடூரமான முறையில் கையாளப்படுகின்றன. தமிழரது பாரம்பரிய பிரதேசங்களில் சிங்கள மேலாதிக்கத்தை ஏற்படுத்துவதற்காக சிறிலங்கா அரசால் கைக்கொள்ளப்படும் வழிமுறைகளான, பொதுமக்கள் மீது பதிலடித் தாக்குதல்களை நடத்துதல் (Collective reprisals) பெருவாரியாகக் கைது செய்தல், படுகொலைகள் புரிதல், நிலங்களை ஆக்கிரமித்து இணைத்துக் கொள்ளல், வீடுகள் சொத்துக்களை அழித்தல் போன்றவை சியோனிஸ பயங்கரவாதிகளால் அறிமுகப்படுத் தப்பட்டவைதான்.

சிறிலங்காவினுள் இஸ்ரேலிய பயங்கரவாதப் பூதம் நுழைய வழிவகுத்தது அமெரிக்க ஏகாதிபத்தியமாகும். அமெரிக்கா இப்பிராந்தியத்தின் கேந்திர முக்கியத்துவத்தில் அக்கறை கொண்டுள்ளது. எனவே ஜெயவர்த்தனவின் வலதுசாரி சர்வாதிகார அரசைப் பாதுகாக்க அது உறுதி பூண்டுள்ளது. இனங்களுக்கிடையிலான மோதலில் நேரடி யாகத் தலையிட விரும்பாத அமெரிக்கா தனது முக்கிய கையாளான இஸ்ரேலை இந்த அடாத வேலைகளுக்காக நியமித்துள்ளது. இஸ்ரேல் அமெரிக்காவின் நம்பிக்கைக்குரிய நண்பனாக மட்டுமின்றி உலகில் அமெரிக்க ஏகாதிபத்திய ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக சகல நாச வேலைகளிலும் ஈடுபடும் ஒரு உப ஏகாதிபத்திய சக்தியாகவும் விளங்குகிறது. சியோனிஸ பயங்கரவாதக் கரங்கள் லத்தீன் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, தூரக்கிழக்குப் பகுதிகளிலுள்ள மூன்றும் உலக நாடுகள் முழுவதிலும் பரவி உள்ளதோடு, தெற்கு ஆசியா விலும் அது இப்போது ஊடுருவிவிட்டது.

மூன்றும் உலகிலுள்ள பல வலதுசாரி, அமெரிக்க சார்பு சர்வாதிகார அரசாங்கங்களுக்கு பெருமளவு ஆயு தங்களை விநியோகம் செய்யும் நாடுகளுள் ஒன்றாக இஸ்ரேல் விளங்குகிறது. அந்நாடுகளில் ஒடுக்கப்பட்ட மக்களின் புரட்சிகர இயக்கங்களை அடக்குவதற்கு கிளர்ச்சி எதிர்ப்பு முறைகளிலும் பயிற்சி அளிக்கிறது. லத்தீன் அமெரிக்காவில் மெக்ஸிகோ, எல்சல்வடோர், குவாதமாலா, ஹோண்டுராஸ், கோஸ்டரிகா, பனமா, கொலம்பியா, வெனிசுலா, ஈக்வ டோர், பெரு, பொலிவியா, சிலி, ஆர்ஜன்டீனு ஆகிய நாடுகளுக்கு இஸ்ரேல் ஆயுத உதவியும், பயிற்சியும் வழங்குகிறது. இப்பட்டியலில் ஆப்பிரிக்க நாடுகளான தென்னுப்பிரிக்கா குடியரசு சுவாசிலாந்து, மாலாவி, சயிர், மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு, கென்யா, கேபன், ஐவரி கோஸ்ட், சைபீரியா, மொராக்கோ ஆகியனவும் அடங்கும். ஆசியாவில் தைவான், சிங்கப்பூர், தாய்லாந்து, தென் கொரியா, பிலிப்பைன்ஸ், மலேசியா, இந்தோனேஷியா ஆகிய நாடுகளுக்கு ஆயுதமும், பயிற்சியும் இஸ்ரேல் வழங்குகிறது. இஸ்ரேலின் ஆயுதங்களையும், பயிற்சியையும் பெறுகின்ற இந்நாடுகளில் பெரும்பாலானவை அமெரிக்கா வின் கைப்பொம்மை நாடுகளாக இருக்கின்றன. தனது எஜமானனை அமெரிக்க ஏகாதிபத்தியம் உலகை அதன் செல்வாக்கினுள்ளும், மேலாதிக்கத்தினுள்ளும் வைத்திருப் பதற்கு, இஸ்ரேல் அமெரிக்காவின் கையாளாகச் செயல் படுகின்றது. உலகில் மக்கள் எழுச்சிகளை அடக்குவதில் ஈடுபடும் இஸ்ரேல், மனித சமுதாயத்துக்கெதிரான மிக மோசமான பாதகங்களைப் புரிந்துள்ளதோடு, மக்கள் ஆதரவுள்ள தேசிய விடுதலை இயக்கங்களுக்கு பேரழிவையும் ஏற்படுத்தி வருகிறது. இஸ்ரேலின் ஆயுதங்கள், ஆலோசனை கள் ஆகியவற்றால் அழித்தொழிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களின் இரத்தத்தால் அதன் கரங்கள் கறைப்படுத்தப்பட் டுள்ளன. உலகனைத்தும் சியோனிஸ்டுகளால் நடத்தப்பெற்ற மனித இன அழிப்புகள் இப்போது இலங்கையிலும் நடைபெறுகிறது. இங்கு சிங்களப் பேரினவாதமும், சியோ னிச பயங்கரவாதமும் இணைந்து தமிழ்மக்களை இனஅழிப்பு நடவடிக்கைக்கு இலக்காக்கியுள்ளன.


ஆகஸ்ட் மாதம், 1983ம் ஆண்டு ஜெயவர்த்தன அரசு இஸ்ரேலுடன் தொடர்பை ஸ்தாபித்துக்கொண்டது. 23, ஜூலை 1983ல் திருநெல்வேலியில் தமிழீழ விடுதலைப்புலிகள் இராணுவ வாகனத்தொடர் ஒன்றின்மீது தாக்குதல்களை மேற்கொண்டு 13 இராணுவ வீரர்களைக் கொன்றனர். அதனைத் தொடர்ந்து தமிழர்களை அழிக்கும் நோக்குடன் அரசாங்க ஆதரவுடன் இனக்கலவரம் இடம்பெற்றது. இராணுவ வீரர்கள் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலினால் அச்சமடைந்த ஜெயவர்த்தன அரசாங்கம் அமெரிக்காவிடமிருந்தும், பிரிட்டனிடமிருந்தும் இராணுவ உதவிகளைக் கேட்டது. அமெரிக்காவும், பிரிட்டனும் இவ் விஷயத்தில் நேரடியாகத் தலையிடத் தயங்கின. ஆனால் அவை, இஸ்ரேலிடமிருந்தும், SAS கூலிப்படை நிறுவனத் திடமிருந்தும் உதவியை நாடும்படி சிறிலங்கா அரசுக்கு ஆலோசனை வழங்கின. அதனைத் தொடர்ந்து சிறிலங்காவின் உளவுத்துறைத் தலைவரும், அறுபதுகளின் கடைசிப் பகுதியில் இஸ்ரேலிய மொசாட் உளவுத்துறையிடம் பயிற்சி பெற்ற வருமான திரு சிறில் கேரத்தும், சிறிலங்காவின் மந்திரிசபைச் செயலாளர் திரு சமரசிங்காவும் 1983 ஆகஸ்டில் இஸ்ரேலிய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு டெல் அவிவுக்கு இரகசியப் பயணம் மேற்கொண்டனர். இஸ்ரே லுடன் சிறிலங்கா ராஜதந்திர உறவுகளை ஏற்படுத்த வேண்டும் என்ற முன்நிபந்தனையின் அடிப்படையில் சிறிலங்காவுக்கு




உதவ இஸ்ரேல் முன்வந்தது. கூட்டுச்சேரா நாடுகளிட மிருந்தும், விசேஷமாக அரபு உலகிலிருந்தும் எதிர்ப்புக் கிளம்பும் என்று பயந்த சிறிலங்கா வர்த்தக உடன்படிக்கை என்ற போர்வையில் இரகசிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்ய விரும்பியது. பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தன. இறுதியில் இணக்கம் ஏற்பட்டது. இஸ்ரேலுடன் பூரண ராஜதந்திர உறவுகளை ஸ்தாபிப்பது தொடர்பான ஒப்பந்தம் ஏற்படும் வரை கொழும்பில் அமெரிக்க தூதராலயத்தில் நலன் பேணும் பிரிவொன்றை வைத்திருக்க இஸ்ரேல் அனுமதிக் கப்பட்டது. இஸ்ரேலின் 'நலன் பேணும் பிரிவைப்' பாதுகாக்கும் வல்லரசாக அமெரிக்க செயல்படும் என்று கொழும்பிலுள்ள அமெரிக்க தூதராலயம் அறிவித்தது. 1984ம் ஆண்டு மே மாத நடுப்பகுதியில் இஸ்ரேலுக்கும் சிறிலங்காவுக்கிடையிலும், இஸ்ரேலுக்கும் அமெரிக்காவுக்கி டையிலும் இரண்டு இரகசிய உடன்படிக்கைகள் கையெழுத் திடப்பட்டன. 24, மே 1984ம் ஆண்டு இஸ்ரேலின் 'நலன் பேணும் பிரிவு' அமெரிக்க தூதராலயத்தில் ஆரம்பிக்கப் பட்டது. இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சில் ஆசியப் பிரிவின் உதவி இயக்குனராகவிருந்த டேவிட் மத்துவாய் என்பவர் நலன் பேணும் பிரிவின் பொறுப்பாளராக்கப் பட்டார். பின்னர், 21, அக்டோபர் 1984ல் இஸ்ரேலின் மூத்த ராஜதந்திரிகளில் ஒருவரான அக்ரேல் கார்னி என்பவர் இப்பிரிவின் தலைவராக நியமிக்கப்பட்டார். இப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டதானது, மொசாத், சின்பத் போன்ற சியோனிஸ நாசகார சக்திகள் சிறிலங்காவுக்குள் அதிக எண்ணிக்கையில் ஊடுருவ வழிவகுத்தது. சிறிலங்காவின் பாதுகாப்பு முறை புதியதொரு பாதையில் செல்லத் தலைப்பட்டது. மக்கள் எழுச்சிகளை அடக்குவதற்காக, தமிழ் மக்களுக்குப் பெரும் அழிவுகளைத் தரவல்ல திட்டம் ஒன்று தீட்டப்பட்டது. அதேவேளை, தாட்சர் அரசாங்கத்தின் மறைமுக ஆசீர்வாதத்துடன், Channel Islandஇல் உள்ள முன்னுள் SAS வீரர்களைக் கொண்ட KMS எனப்படும் கூலிப்படை நிறுவனத்தின் சேவையையும் சிறிலங்கா பெற்றது. சிறிலங்காவின் அதிரடிப் படைப்பிரிவான ''பொலிஸ் கமாண்டோக்களுக்கு'' விசேஷ பயிற்சி அளிக்கும் பொறுப்பு SAS கூலிப்படையினரிடம் விடப்பட்டது. இப்பொலிஸ் கமாண்டோக்களில் ஒரு பகுதியினர் பாகிஸ் தானிலும் பயிற்சி பெறுகிறார்கள். இலங்கையின் கிழக்குப் பகுதியில் தமிழ் மக்களை இந்து-முஸ்லீம் எனப்பாகுபடுத்தி கலவரங்களை ஏற்படுத்துவதிலும், படுகொலை செய்து, அச்சுறுத்தி போராளிகளுக்கெதிராக பொதுமக்களைத் திருப்பி விடுவதிலும் பொலிஸ் கமாண்டோக்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

இத்தகைய நாசகாரசக்திகள் இங்கு நுழைந்ததால் சிறிலங்கா அரச அடக்குமுறை இயந்திரத்தின் தன்மை யிலும், அமைப்பிலும் அடிப்படையான மாற்றங்கள் ஏற்பட்டன. சிறிலங்காவின் பாசிச ஆட்சி சியோனிச பயங் கரவாதக் கருத்துக்களை உள்வாங்கி புதிய கொடூரமான பரிமாணத்தைப் பெற்றது. இஸ்ரேலிய உளவு நிறுவனங் களின் நிபுணர்கள், ஜோர்தானின் மேற்குக்கரையில் பாலஸ்தீனிய மக்களை அடக்குவதற்கு தாம் கையாண்ட தந்திரங்களையும், உலகில் கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகளில் பெற்ற அனுபவங்களையும் சிறிலங்காவுக்கு வழங்கினர். இவ்வாலோசனைகள் தமிழர்களைப் பூண்டோடு அழிக்கும் இனக் கொலை என்ற வடிவத்தைப் பெற்றன.

ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீன மக்களின் தாயகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது போன்ற 'பாதுகாப்பு நடவ டிக்கைகள்' தமிழீழத்திலும் செயல்படுத்தப்பட்டன.




தினமலர்

இராணுவ ஆட்சியை ஏற்படுத்தியமை, பாதுகாப்பு வலயங் களாகப் பிரகடனப்படுத்தப்பட்ட தமிழ்ப்பிரதேசங்களில் போக்குவரத்துக்கு அவசரகாலச் சட்ட விதிகள் மூலம் தடை விதித்தமை சில உதாரணங்களாகும். ஆக்கிரமிக்கப் பட்ட பாலஸ்தீனத்தில் அரபு மக்களின் குடியிருப்புகளை தடை செய்யப்பட்ட பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்தி இஸ்ரேலியர் எடுத்ததுபோன்ற நடவடிக்கைகளை தமிழீழத் திலும் மேற்கொள்ளப்படுகின்றன. நிலங்களை இணைத்தல், சனத்தொகை விகிதாசாரத்தை மாற்றுதல் போன்ற சியோ னிசக் கொள்கைகள் 'குடியேற்றத்தின் மூலம் வெற்றி கொள்ளல்' என்று அழைக்கப்படுகிறது. சிறிலங்கா அரசாங்கம் இக்கொள்கையை, தமிழ் நிலங்களைச் சுவீகரித்து, தமிழர் கிராமங்கள், நகரங்களை அழித்து, பாரம்பரிய நிலங்களிலிருந்து மக்களைத் துரத்தியடித்து மிகவும் கொடூர மான முறையில் நடைமுறைப்படுத்தியது. ஆயிரக்கணக்கான தமிழ்மக்கள் நம் சொந்த மண்ணிலும், வெளிநாடுகளிலும் ஆதரவற்ற அகதிகள் ஆயினர். பாலஸ்தீன மக்களைப் பூண்டோடு அழிக்க மிகக் கொடிய படுகொலைகள் மூலமும், சொல்லொணுக் கொடூரங்கள் மூலமும் பலமுறை சியோ னிஸ்டுகள் முயன்றது போல் இலங்கையிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கலவரங்களைத் தூண்டிவிட்டு குண் டர்படை மூலம் தமிழ் மக்களின் சொத்துக்களை, உயிர்களை அழித்தல் போன்றவை தமிழ்மக்களை இல்லாதொழிக்க மேற் கொள்ளப்பட்ட திட்டமிட்ட முயற்சிகளில் சிலவாகும்.

பொதுமக்களைப் பழிவாங்கும் சியோனிஸ 'ஒட்டுமொத்த தண்டனை' கொள்கை யானது சிறிலங்காவின் இராணுவத் தால் மிகவும் காட்டுமிராண்டித்தனமான முறையில் நடை முறைப்படுத்தப்படுகிறது. கெரில்லாத் தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்கு முகமாக பொதுமக்களைத் தாக்குகிறார்கள். பெண்கள், குழந்தைகள் உட்பட அப்பாவித் தமிழ் மக்களை கண்மூடித்தனமாகக் கொன்று குவிக்கிறார்கள். அவர்களது சொத்து, உடமைகளை சூறையாடுகிறார்கள்; அழிக்கிறார்கள். பொதுமக்களை அச்சுறுத்தி கெரில்லாக்களுக்கு எதிராகத் திருப்பி விடுவதே இத்தகைய அழிவுவேலையின் நோக்க மாகும்.

சியோனிஸ்டுகளால் வழங்கப்பட்ட 'சேவை'களுக்குப் பிரதி உபகாரமாக, சிறிலங்கா அரசாங்கம் 15 வருடகாலமாக இஸ்ரேல் மீது விதித்திருந்த வர்த்தகத் தடையை நீக்கியது. சிறிலங்காவுக்கும், இஸ்ரேலுக்கும் இடையேயான உறவு இப்போது மேலும் நெருங்கியுள்ளதோடு, தமிழ் மக்களை நிர்மூலமாக்கும் திட்டத்தில் இருநாடுகளும் கூட்டுப்பங்காளி களாகிவிட்டன. இஸ்ரேல் கவசவாகனங்கள், விரைவுப்படகுகள் உட்பட பல நவீனரக ஆயுதங் களை சிறிலங்காவுக்கு விநியோகம் செய்கிறது. Asian defense Journal ஜுலை 85ல் பின்வருமாறு செய்தி வெளியிட்டது. 'இப்பிராந்தியத்தில் இஸ்ரேலின் வருகையால் ஏற்பட்ட சர்ச்சைக்குரிய திருப்பங்களில் ஒன்று பல தென்னுபிரிக்க ஜெட் போக்குவரத்து விமானங்கள்கொழும்பு விமானநிலை யத்தில் இறங்கியமையாகும். சிறிலங்கா அரசாங்கத்தின் பொருட்டு இஸ்ரேலியர்களால் வாங்கப்பட்ட தென்னுப் பிரிக்க ஆயுதங்களையே அவ்விமானங்கள் கொண்டு வந்ததாக நம்பப்படுகிறது. அவ்வாயுதங்கள் ஆசியாவின் ஆயுத இருப்பை அதிகரிக்கச் செய்யும்' உலகனைத்தையும் ஏகாதிப த்தியத்தின் கீழ் கொண்டுவர ஒருங்கிணைந்து செயல்படும் அமெரிக்கா, இஸ்ரேல், தென்னுப்பிரிக்கா ஆகிய நாடுகளும் அவற்றின் கைப்பொம்மைகளான பாகிஸ்தான், சீனு, தென் கொரியா போன்ற ஆசிய நாடுகளும் ஜெயவர்த்தனவின் தமிழருக்கெதிரான கொடூரமான ஒடுக்குமுறைக் கொள்கை களை தீவிரமாக ஆதரிக்கின்றன.

சியோனிச அரசுக்கு பூரண ராஜதந்திர அந்தஸ்தை வழங்க வேண்டுமென்று இஸ்ரேல் சிறிலங்காவுக்கு அழுத்தம் கொடுத்து வருகிறது. கடந்த அக்டோபர் மாதம் பாரிஸில் ஜெயவர்த்தனவுக்கும், இஸ்ரேல் பிரதமர் ஷிமன் பெரசுக்கும் இடையில் நடைபெற்ற இரகசிய சந்திப்பில் பேசப்பட்ட முக்கிய விஷயங்களுள் இதுவும் ஒன்றாகும். தமிழருக் கெதிரான கொடிய யுத்தத்தில் இஸ்ரேலியர்கள் மேலும் மேலும் ஆழமாக தம்மை ஈடுபடுத்தி வருவதால், ஜெய வர்த்தன அவ்வழுத்தத்துக்கு அடிபணிந்து போகக்கூடும். 3.5.1986 அன்று, இனப்பிரச்சினை குறித்து பேச்சு வார்த்தை நடத்துவதற்காக சிறிலங்கா சென்ற இந்தியப் பிரதிநிதி கள் குழு அங்கு நிற்கும்போதே தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி இஸ்ரேலுக்கு இரகசிய பயணம் ஒன்றை மேற்கொண்டார். அவர் சென்ற விமானத்தில் கூடவே இஸ்ரேலிய நலன் பேணும் பிரிவின் தலைவர் கெய்ம் டி வொன்னும் பயணமானர்.

சிறிலங்காவில் சியோனிஸ பயங்கரவாதிகளின் ஊடுருவ லும், படிப்படியாக அங்கு அவர்கள் தம்மை நிலைநிறுத்திக் கொள்வதும் இந்திய உபகண்டத்தின் அமைதிக்கும், ஸ்தி ரத்தன்மைக்கும் மிகப் பெரிய மிரட்டலாக அமைந்துவிடும். இப்பிராந்தியத்தில் ஏகாதிபத்திய அபிலாஷைகளைப் பரப்ப வும், நிலைநிறுத்தவும் அமெரிக்க, இஸ்ரேல், தென்னுப்பிரிக்கக் கூட்டானது இந்து சமுத்திரத் தீவில் படிப்படியாக தனது காலை ஊன்றிக் கொள்ள முயல்கிறது. இச்சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமைக்கான போராட்ட மானது, 3ம் உலக நாடுகளை தனது மேலாதிக்கத்துக்கு உட்படுத்தி, சுரண்டும் ஏகாதியத்திய முயற்சிகளுக்கெதிரான போராட்டமாக அமைந்து விடுகிறது.

23-5-86 அன்று இஸ்ரேலிய அரச ரசாயன நிறுவனமொன்றின் தலைவர் ஜோரம் தலைமை தாங்கிய மூவரைக் கொண்ட வர்த்தக் குழு சிறிலங்காவுக்கு வருகை தந்தது. 1970ம் ஆண்டுக்குப் பின் முதல் முறையாக வருகை தந்துள்ள இக்குழு தேயிலை, ரப்பர் ஆகியவற்றை வாங்குவது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளும் என்று கூறப்பட்டது. ஆனல் உண்மையில் இன அழிப்பு முயற்சியில் சிறிலங்காவுக்கு உதவும் பொருட்டு மேலும் நவீன ஆயுதங்களையும், ஆலோசனைகளையும் வழங்குவது தொடர்பான ஒப்பந்தம் ஒன்றைச் செய்யும் பொருட்டே இக்குழு சிறிலங்கா வந்தது. இக்குழு மொசாட் அமைப்பின் உயர்மட்ட அதிகாரிகளை கொண்டிருந்தது என்பது உறுதி படுத்தப்பட்ட உண்மையாகும்.

www.eelamview.com

www.eelamview.com

# சொல்லக் கொதிக்குது நெஞ்சம்



ஈழத்தமிழினம், சிங்களப்பேரினவாத அடக்குமுறை அரசின் கொடுங்கரங்களுக்குள் சிக்கி பல்லாண்டு காலமாக நசுக்கப்பட்டு வருகிறது. தமிழின அழிப்பு நடவடிக்கைகள் தற்போது உச்சக் கட்டத்தை அடைந்துள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்தி வரும் வெற்றிகரமான அதிரடித் தாக்குதல்களினால் பெரும் ஆட் சேதத்திற்கும், ஆயுத இழப்பிற்கும் உட்பட்டிருக்கும் அரச படைகள் நிலை குலைந்து, உறுதியிழந்து தோல்வியைத் தழுவிக்கொண்டிருக்கின்றன. இத்தோல்வியினால் ஏற்பட்ட ஆற்றாமையையும், கையாலாகாத்தன்மையையும் சகிக்கமுடியாமல் வெறிகொண்டு அப்பாவித் தமிழர்களைக் கோரமாக கொலை செய்கிறார்கள். ஆண், பெண், குழந்தைகள் என்ற வேறுபாடின்றி வெட்டியும், சுட்டும், உயிரோடு கொளுத்தியும் தமிழினம் அழிக்கப்படுகிறது. கடந்த சில வாரங்களில் திருகோணமலை, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் சிங்களக் கூலிப்படைகளது அடாவடித்தனங்கள் எல்லை மீறியது.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள உப்புவெளி என்னும் இடத்தில் சிங்களக் காடையர்கள் 2 பெண்கள், ஒரு 8 வயதுச் சிறுமி உட்பட 10 அப்பாவித் தமிழர்களை கொடூரமான முறையில் படுகொலை செய்துள்ளனர். 'இவர்களது கை, கால் எலும்புகள் முறிக்கப்பட்டிருந்தன.

— இந்து 4/6/86.

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கி சென்று கொண்டிருந்த புகையிரதம் கொழும்பிலிருந்து 150 மைல் தொலைவில் உள்ள செக்கிராவவுக்கும் பலுகஸ்வேவாவுக்குமிடையில் சிங்களக் குண்டர் படையினால் வழிமறிக்கப்பட்டது. அதிலிருந்த தமிழ்ப் பயணிகளைக் கீழே இறக்கி, வரிசையாக நிறுத்தி கத்தி, வாள் போன்ற ஆயுதங்களினால் பயங்கரமாக தாக்கி படுகொலை செய்தனர். இச்சம்பவத்தின் போது 12 பேர் ஸ்தலத்திலேயே துடிதுடித்து மாண்டனர். 55 பேர் படுகாயமடைந்தனர். இறந்தவர்களில் ஒருவர் முஸ்லிம் பெண்மணி.

— இந்தியன் எக்ஸ்பிரஸ். 5/6/86.

திருகோணமலையில் பஸ் ஒன்று வழிமறிக்கப்பட்டு அதில் இருந்த 9 அப்பாவித்தமிழர்கள் சிங்கள ஊர் காவல் படையினரால் கோரமாக கொலை செய்யப்பட்டனர். பின் இவர்களது உடல்கள் பெட்ரோல் ஊற்றி கொளுத்தப்பட்டன.

மேலும் நீர்ப்பாசனத்துறைக்கு சொந்தமான ஜீப் வண்டி சிங்களக்காடையர்களால் வழிமறிக்கப்பட்டு 2 தமிழ் பொறியியலாளர்களும் ஜீப் சாரதியுமாக மொத்தம் மூவர் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்து 6/6/86

இனி நொச்சியில் விமானப் படையினர் மேற்கொண்ட குண்டு வீச்சுத் தாக்குதலில் 4 பாடசாலை மாணவர்கள் உட்பட 8 அப்பாவித் தமிழர் பலியாகினர்.

இந்து 6/6/86

கடந்த 5/06/86 அன்று கல்லோயாவிலிருந்து திருக்கோணமலை நோக்கி சென்று கொண்டிருந்த புகையிரதம் சிங்களக் காடையர்களால் வழிமறிக்கப் பட்டது. கத்திகளுடனும் வாள்களுடனும் குண்டாந்தடிகளுடனும் புகையிரதத்தினுள் ஏறிய காடையர்கள் 60 அப்பாவித்தமிழர்களை கோரமாக கொன்றனர். அதில் பெண்கள், குழந்தைகள் ஆகியோரும் அடங்குவர்.

கடந்த 6.6.86 அன்று வவுனியாவில் இருந்து வந்து கொண்டிருந்த பஸ்கள் வழிமறிக்கப்பட்டு அதில் பயணம் செய்து கொண்டிருந்த 58 தமிழ் பயணிகள் ஆயுதம் தாங்கிய, முகமூடியணிந்த சிங்களப்பயங்கரவாதிகளால் வெளியே இறக்கப்பட்டு, காட்டுக்குள் அழைத்துச் செல்லப்பட்டு கண்களும், கைகளும் கட்டப்பட்ட நிலையில் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டு கொடூரமாகக் கொல்லப்பட்டனர்.


இதேபோல் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த பஸ்கள் வழிமறிக்கப்பட்டு அதிலிருந்த 73 அப்பாவித்தமிழர்கள் கடத்தப்பட்டனர். இவர்கள் சிங்களக் குண்டர்களால் கொல்லப்பட்டிருக்கலாமென அஞ்சப்படுகிறது.

இதேபோல் கண்டியிலிருந்து கொழும்புக்கு சென்று கொண்டிருந்த பஸ் ஒன்றும் குண்டர்களால் வழிமறிக்கப்பட்டு அதிலிருந்த தமிழர்கள் அனைவரும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். — இந்து 7/6/86

























மேலும் கடந்த 8.6.86 அன்று கொழும்பிலிருந்து திருகோணமலைக்கு பஸ்ஸில் வந்து கொண்டிருந்த 27 தமிழர்கள் சிங்களக்காடையர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

இதேபோல் தம்பலகாமம் - கொழும்பு பஸ்ஸில் பயணம் செய்த 15 அப்பாவித் தமிழர்கள் கந்தளாயில் வைத்து இராணுவத்தினரால் கடத்திச் செல்லப் பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் கொல்லப்பட்டிருக்கலாமென அஞ்சப்படுகிறது.

மேலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் தரை மார்க்கமாக எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாது தோல்வியைத் தழுவி முகாம்களிலேயே முடங்கிக்கிடக்கும் அரசின் கூலிப்படைகள் கடல், ஆகாய மார்க்கமாக அப்பாவித் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்த முற்பட்டுள்ளனர். இதன்படி ஆகாய மார்க்கமாக குண்டு வீச்சு விமானங்களும் ஹெலிகாப்டர்களும் குண்டுகளை வீசியும் இயந்திரத் துப்பாக்கியால் சுட்டும் அப்பாவித் தமிழர்கள் மீது வெறித்தனமாக தாக்குதல்களை மேற்கொள்ள முனைந்த போது விடுதலைப்புலிகளின் ஆவேசமான எதிர்த்தாக்குதல்களை சமாளிக்க முடியாமல் பின்வாங்கின.

இதே போல் கடலிலிருந்து பீரங்கிப் படகுகள் மூலம் தாக்குதல் நடத்த முற்படும் போது விடுதலைப் புலிகளின் வெற்றிகரமான தாக்குதல்களினால் சில பீரங்கிப்படகுகள் தகர்க்கப்பட்டன.

இதனால் ஆத்திரமுற்ற, கோழைகளான அரசின் கடற்படைக் கூலிகள் தமது ஆற்றாமையை அப்பாவித் தமிழர்கள் மீது வெறித்தனமாக வெளிப் படுத்தியுள்ளனர்.

கடந்த 10.6.86 அன்று காலை வழமை போல் மண்டைத்தீவுக் கடல் பிராந்தியத்தில் மீன் பிடிக்கும் பொருட்டு பல படகுகளில் ஏழை மீனவர்கள் சென்று கொண்டிருந்தபோது திடீரென கடற்படையினர் பீரங்கிப் படகுகளில் வந்து மீனவர்களைச் சுற்றி வளைத்தனர். வெறி கொண்ட சிங்களப் பயங்கரவாதிகள் மீன்பிடிப் படகுகளில் தாவி ஏறி, தமது வயிற்றை நிரப்பும் பொருட்டு தொழிலை மேற்கொள்ளச் சென்ற அப்பாவி தமிழ் மீனவர்களை பயங்கரமாகத் தாக்கத் தொடங்கினர்.

கத்தி, வாள், கோடாரி போன்ற கூரிய ஆயுதங்கள் அப்பாவி மீனவர்களின் உடல்களை பதம் பார்த்தன. தலைகள் துண்டிக்கப்பட்டன. கை, கால்கள் வேறுக்கப் பட்டன. கண்கள் தோண்டி எடுக்கப்பட்டன. நெஞ்சிலும் வயிற்றிலும் கத்திகள் பாய்ந்தன. இடையிடையே இயந்திரத்துப்பாக்கிகள் முழங்கியதில் தமிழ் மீனவர்களின் உடல்கள் சல்லடையாக்கப்பட்டன. தமிழரின் மரண ஓலம் கடல் அலைகளின் இரைச்சலுடன் தேய்ந்து மறைந்தது. மொத்தம் 37 அப்பாவித் தமிழ் உயிர்கள் அராஜகவாதிகளால், அக்கிரமக்காரர்களால் அலைகடலின் நடுவே கோரமாகப் பலியிடப்பட்டன.

மேலும் கடந்த 12/6/86 அன்று மூதூரில் உள்ள சச்சிலம்பத்தை என்ற இடத்தில் அமைந்துள்ள அகதிகள் முகாமுக்கு உணவுப் பொருட்களை எடுத்து வருவதற்காக அயலிலுள்ள சிங்களக் கிராமத்துக்கு சென்ற கிராம சேவகர், 2 முஸ்லிம்கள் உட்பட 22 அப்பாவித் தமிழர்கள் சிங்கள ஊர்க்காவல்படையைச் சேர்ந்த காடையர்களால் கொடூரமான முறையில் வெட்டிக் கொல்லப்பட்டனர்.


மனித நாகரீகமே வெட்கித்தலைகுனிய வேண்டிய விதத்தில் மிகக்கீழ்த்தரமான முறையில் சிங்களக் காட்டுமிராண்டிகள் கூட்டம் இப்படுகொலைகளைப் புரிந்துள்ளது.

இப்படித் தொடர்ச்சியாக தமிழீழத்தின் சகல பகுதிகளிலும் இன வெறி அரசு படுகொலைகளைப் புரிந்து வருகிறது. ஆனால் இந்தப் பயங்கரவாதச் செயல்களினாலோ, காடைத்தனத்தினாலோ தமிழ் மக்களின் போராட்டத்தை, சுதந்திர உணர்வை மழுங்கடிக்கச் செய்து விடலாமென சிங்கள அரசு நினைத்தால் அது வெறும் பகற்கனவே. அவ்வாறான இப்படுகொலை நடவடிக்கைகள் தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை மேன் மேலும் உறுதியுடனும், உத்வேகத்துடனும் முன்னெடுத்துச் செல்லவே வழி வகுக்கும்.

கடல் நடுவே நடந்த படுகொலையில் பலியானவர்கள்.

www.eelamview.com

www.eelamview.com



# மரணத்தின் வாசலில் மற்றுமோர் சாதனை

இலங்கைத் தீவின் ஒரு பகுதியாக இருந்த எமது மண் இன்று, உலகத்தின் கண்களில் தமிழீழமாக தோன்றத் தொடங்கியிருக்கின்றது. இந்த மாற்றம், வெறும் ஒலி பெருக்கி முழக்கங்களாலும், அச்சடித்த காகிதங்களாலும், வாய்ச் சவடால்களாலும் கொண்டு வரப்பட்டதல்ல. ஒற்றைத் துப்பாக்கியோடு, உறுதியும், கட்டுப்பாடுடனும் ஆரம்பித்த எமது இயக்கத்தின் எண்ணற்ற வீரர்கள் செய்த தியாகங்களாலும், சிந்திய இரத்தத்தாலும், கண்ட சாதனைகளாலும் உருவானதுதான் இன்றைய தமிழீழம். இதற்கு நாம் கொடுத்த விலை சொல்லில் அடங்காது. வீட்டைப் பிரிந்து, படிப்பைத் துறந்து... கைகளில் துவக்கோடும், கழுத்தில் சயனைட்டோடும் களத்தில் முன்னின்ற இளம் புலிகள் எத்தனை பேர்! அவர்களது வேட்கையும், வீரமும், விவேகமும்தான் விடுதலைப்போரின் உயிர்மூச்சு. இவர்களது வெற்றிகளின் பின்னால் வேதனைகள், எத்தனையோ வீர மரணங்கள். மண்ணில் கலந்த குருதி நாளைய அரசியல் சாசனமாக உருமாறும். இவர்கள் களம் கண்ட கதையை தலைமுறைகளிற் கூடாக காலம் எப்போதும் சொல்லிக் கொண்டிருக்கும்.

அந்த வரலாற்று நாயகர்களில் ஒருவன் ஜெயம். இயற்பெயர் கந்தையா.அபிமன்யு. வல்வெட்டித்துறைக்கருகேயுள்ள இலந்தைக் காட்டைச் சேர்ந்தவர். இயக்கத்தின் உறுப்பினரான இவர், பல போராட்டங்களை சந்தித்தவர். இரவு பகல் பாராது இவரது கடுமையான உழைப்பையும் எப்போதும் உற்சாகமாகத் திரியும் சுபாவத்தையும் நண்பர்கள் இன்றும் நினைவுகூர்கின்றனர். உழைப்பின் பயனாகவும் இனிய சுபாவத்தாலும் கிராம மக்களிடையே ஆதரவையும் செல்வாக்கையும் பெற்றிருந்தார். அதுவே அவரை ஒரு பகுதியின் பொறுப்பாளராக உயர்த்தியது. அரசியல் ரீதியாகவும் மக்களை விழிப்படையச் செய்வதில் மிகுந்த அக்கறையுடன் செயலாற்றிக் கொண்டிருந்தார்.

அந்த விடுதலை வேங்கை எல்லார்க்கும் ஆதர்ச வீரனானார் ஒரு நாள் — 9.5.85 அது அவரது கடைசிதான் ஆனால் அவருக்கு மட்டுமல்ல...

1. 9.5.85 உடுப்பிட்டி கிராமம். இன்னும் துயில் கலையாத அதிகாலை. ஆனால் விடுதலைப்புலிகளின் தளம் ஒன்றில் தன் மக்களை, தோழர்களை பாதுகாப் பதற்காகக் கண்விழித்துக் காத்திருக்கிறான் ஜெயம்.

2. கிராமத்தின் நிசப்தம் பீரங்கிகளின் இடி யொலிகளில் சிதறுகிறது. வல்வெட்டித்துறைப் பகுதியில் அரச படைகளின் அட்டூழியம்.

3. ஆபத்தை உணர்ந்து கொண்ட ஜெயம் அவதானமாக செயல்படலானான். கிராமத்தினுள் நுழையும் இராணுவத்தினர் தமது தளத்தையும் சுற்றி வளைக்க முற்படலாம் என்ற முன் னெச்சரிக்கையுடன் தனது தோழர்களைத் தயார்படுத் தினான்.

4. தன் தோழர்களை விழிப் படையச் செய்த ஜெயம் மக்களுக்கு ஏதும் நேர்ந்து விடுமோ என்ற அச்சத் துடன் இராணுவத்தின் நடமாட்டத்தை அறிந்து வர அங்கிருந்து புறப்பட் டான்.

5. சூழலை சுற்றுமுற்றும் ஆராய்ந்தவாறே கிராமத் தின் எல்லையை நோக்கி விரைந்தான்.

6. ஆனால் இதற்குப் பல மணி நேரத்திற்கு முன்பே கிராமத்தினுள் நுழைந்த இராணுவத்தினர் உடுப் பிட்டி பஸ் நிலையத்திற்கருகேயும், அதனுள்ளும் தம் மை நிலைப்படுத்திப் பதுங் கியிருந்தவர்.

7. பஸ் நிலையத்தில் இராணு வத்தினரைக் கண்ட மறுவிநாடியே மின் னலெனச் செயல்பட் டான்...

8. ... இடுப்பிலிருந்த வெடிகுண்டுகளை நோக்கி விரைந்தன கைகள்.

9. அதற்குள் இராணுவத் தினரின் துப்பாக்கிகள் வெடிக்கத் தொடங்கி விட் டன.

10. ஜெயத்தைச் சுற்றிலும் குண்டுகள் சீறிப் பறந்து கொண்டிருந்தன... ஒன்று மார்பைத் துளைத்தது.


11. நெஞ்சில் குண்டு பாய்ந்த பிறகும் கையில் வெடி குண்டோடு எதி ரியை நோக்கி ஓடினான் அந்த மாவீரன்.

12. இறுதி மூச்சுவரை உறுதி தளராமல், வெடி குண்டை இராணுவத் தினரை நோக்கி வீசினான்.

13. குறி தவறவில்லை. குண் டும் பொய்க்கவில்லை. இடி முழக்கத்துடன் வெடித்துச் சிதறியது.

14. மேஜர் மெண்டிஸ் (பலமுறை தமிழர்களை வேட்டையாடும் நடவடிக் கைகளுக்குத் தலைமை தாங்கிய இனவெறியன்.) மற்றும் ஐந்து இராணு வத்தினர் ஸ்தலத்திலேயே மரணமடைந்தனர்.

15. அக்காட்சியைக் கண்ட ஜெயத்தின் கண்கள் அதன் பின் இமைக்கவில்லை. அமரத்துவம் அடைந் தான்— தோழர்களின், மக் களின் நெஞ்சங்களில்.



www.eelamview.com

www.eelamview.com





# எல் சால்

இன்று லத்தீன் அமெரிக்கக் கண்டத்தின் பல மூலைகளில் புரட்சிகரப் போராட்டங்கள் அதிதீவிரமடைந்து வருகிறது. அமெரிக்க ஏகாதிபத்திய சுரண்டல் முறைக்கும், அதற்கு முண்டுகொடுக்கும் இராணுவ சர்வாதிகார ஆட்சிகளுக்கும் எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்து போராடி வருகின்றார்கள். இந்த வீர சுதந்திரப் போராட்டங்களின் முக்கியமான ஒரு களம் எல்சல்வடோர், கடந்த 5 ஆண்டுகளாக. இந்நாட்டில் வெகுசனப் போராட்டம் உச்சநிலையை அடைந்துள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தினால் திணிக்கப்பட்ட இராணுவக் கொடுங்கோன்மை அரசிற்கெதிராக கெரில்லா வடிவிலான ஆயுதப் புரட்சிப் போராட்டம் தீவிரமடைந்து வருகின்றது. ஆயுதப் போராட்டத்தாலும் வெகுசன எழுச்சியாலும் நிலைகுலைந்து வரும் அரசு இராணுவ அடக்குமுறையை முடுக்கிவிட்டிருக்கிறது. இராணுவ வெறியாட்டத்தால் இதுவரை ஐம்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் அநியாயமாகக் கொன்று குவிக்கப்பட்டனர். இராணுவ அடக்குமுறை தீவிரமடைய, மக்களின் போராட்ட உறுதியும் உரம்பெற்று வருகிறது. மக்கள் ஆதரவு பெற்ற கெரில்லா விடுதலைப் படையினர் எல்சல்வடோரின் பல பகுதிகளை தமது ஆட்சியின் கீழ் கொண்டுவந்துள்ளனர்! வெகுசன அரங்கிலும் யுத்த களங்களிலும் போராட்டம் முனைப்படைகிறது. அமெரிக்காவின் கைப்பொம்மை ஆட்சி ஆட்டம்கண்டு வருகிறது. எல்சல்வடோர் மக்களின் வீரமிக்க போராட்ட வரலாற்றை இங்கு சுருக்கமாகத் தருகிறோம்.

16 ஆம் நூற்றுண்டு முதல் இந்நாடு ஸ்பானிய ஆட்சிக்குட்பட்ட காலனியாக இருந்தது. 1821 ஆம் ஆண்டு மத்திய அமெரிக்க நாடுகள் ஸ்பெயின் காலனித்துவத்தில் இருந்து விடுதலை அடைந்ததைத் தொடர்ந்து எல்சல்வடோரும் அதன் காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுதலை அடைந்தது இதைத் தொடர்ந்து இந்நாட்டின் ஆட்சி அதிகாரம் குறிப்பிட்ட பதின்நான்கு நிலப்பிரபுத்துவ குடும்பங்களிடையே கைமாறிக் கொண்டு வந்தது. 19 ஆம் நூற்றுண்டின் நடுவில் இந்நாட்டின் ஆட்சியில் இருந்த அதிகாரவர்க்கம் தமது செல்வத்தையும் வருவாயையும் பெருக்கும் நோக்கில் இராணுவம் உள்ளூர் காவல் படைகளது உதவியுடன் வலுக் கட்டாயமான நிலச்சீர்திருத்தச் சட்டங்களை மக்கள் மீது திணித்தது. இவ்வாறு முதலாளித்துவ சுரண்டல் முறைக்கும் அடக்குமுறைக்கும் உட்படுத்தப்பட்ட மக்கள் தமது பாரம்பரியமான சொந்த நிலங்களை இழக்க நேரிட்டது. பரம்பரை பரம்பரையாக விவசாயிகளாக இருந்த இம்மக்கள் தமது சொந்த நிலங்களை இழந்து விவசாய வாழ்க்கையைத் துறந்து அடிமைத் தொழிலாளர்களாக மாற்றப்பட்டனர். சொந்த நிலங்களிலேயே வலுக்கட்டாயத்தின் பேரில் தொழிலாளர்களாக அமர்த்தப்பட்டனர். நாட்டின் முழு நிலப்பரப்பில் 60% நிலம் ஆட்சியாளர்களுக்கே சொந்தமாக்கப்பட்டது.

பலவந்தமாக பறித்தெடுக்கப்பட்ட இந்நிலங்களில் கோப்பி, பருத்தி, சீனி போன்ற ஏற்றுமதிப் பொருட்கள் பயிரிடப்பட்டன. இது செல்வந்தர்களை மேலும் செல்வந்தர்கள் ஆக்கியது. இத்தோட்டங்களில் வேலைக்கமர்த்தப்பட்ட தொழிலாளர்களுக்கு மிகக்குறைந்த ஊதியமே வழங்கப்பட்டது. 1975 இல் இந்நாட்டு சாதாரண மக்களின் வருடாந்த வருமானம் பத்து டாலர்கள். குறிப்பிட்ட அறுவடை காலங்களில் மட்டுமே இவர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டது. மூன்றும் உலக நாடுகளில் உள்ள தொழிலாளர்களை விட மிகவும் கீழ்த்தரமான வாழ்க்கை நிலைக்கு இம்மக்கள் தள்ளப்பட்டனர். கிராமப்புற விவசாயிகளுக்குக் குடியுரிமை அளிக்கப்படவில்லை. நகரவாசிகளுக்கே குடியுரிமை வழங்கப்பட்டிருந்தது. குடியுரிமை பெற்றவர்கள் பெரும்பாலும் அரசாங்க ஆதரவாளர்கள். இங்கு தேர்தல்கள் நடைபெற்றாலும் அவையாவும் மக்களை ஏமாற்றுவதற்காக நடத்தப்பட்ட மோசடி நிறைந்த நயவஞ்சக நாடகங்களாகவே இருந்தன இத்தேர்தல்கள் இராணுவம், உள்ளூர் காவல்படை, குண்டர்களது உதவியுடனேயே நடைபெற்றன. இதன் மூலம் குறிப்பிட்ட பதின்நான்கு நிலப்பிரபுத்துவ குடும்பங்களைச் சேர்ந்த நிலப்பிரபுக்களே மீண்டும் மீண்டும் ஆட்சியில் அமர்ந்தனர். எல்சல்வடோரின் பொருளாதாரம் மேற்கூறிய சிறுபான்மையினரின் கையில் இருந்ததாலும், இந்நாட்டின் பிரதான உற்பத்திப் பொருளான காப்பியின் விலை சர்வதேச சந்தையில் பெரும் வீழ்ச்சியடைந்ததாலும், தேசிய பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாகப் பெருமளவு தொழிலாளர்கள் தமது வேலைகளை இழக்க நேரிட்டது. விலைவாசிகள் உயர்ந்தன. ஏற்கனவே தமது நிலங்களை இழந்த எளிய மக்கள் படுமோசமான வறுமைக்கு தள்ளப்பட்டனர். பசிபட்டினியால் ஏராளமானோர் இறந்தனர்.

இச்சுரண்டல் முறையின் விளைவே 1870க்கும் 1932க்கும் இடைப்பட்ட காலத்தில் சிறிதும், பெரிதுமான மக்கள் கிளர்ச்சிகளுக்கு வழிகோலியது. இவையாவும் இராணுவ ஒடுக்கு முறையால் முறியடிக்கப்பட்டன. இக்கிளர்ச்சிகளின் போது முப்பதினாயிரம் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இராணுவ சர்வாதிகார ஆட்சிப் பீடம் தனது அரசியல் பொருளாதார ஆதிக்கத்தை நிலைநாட்டும் நோக்குடன் அநீதியான சட்டங்களைப் பிறப்பித்து எல்சல்வடோர் மக்களை மிகக் கொடுமையான அடக்கு முறைக்கு உள்ளாக்கியது. இதனால் சிலர் மலைநாட்டுப் பகுதிகளுக்கும், கடற்கரையோரப் பகுதிகளுக்கும், கொண்டுராஸ் நாட்டிற்கும் அகதிகளாகச் சென்று குடியேறத் தொடங்கினர். இம்மக்களின் நிலங்களையும், விட்டுச் சென்ற இடங்களையும் ஆட்சியாளர்கள் இராணுவத்தினதும், உள்ளூர் காவல் படையினதும் உதவி கொண்டு தமக்குச் சொந்தமாக்கினர். அந்நிலங்களில் தமது சுரண்டல் உற்பத்தி முறையைப் பெருக்கும் நோக்குடனேயே காப்பி, பருத்தி போன்ற பணப்பயிர்களை விளைவித்து பெருலாபமடைந்தனர்.




ரஷ்யா, மெக்ஸிகோ புரட்சிகளைத் தொடர்ந்து எல்சல்வடோரிலும் 1919, 20களில் ரயில்வேத் தொழிலாளர்கள், ஆசிரியர்கள், பாதணி செய்பவர்கள் போன்ற தொழிலாளர்கள் தமது நலன்கள் மற்றும் ஊதிய உயர்வுக்காக எல்சல்வடோர் தேசிய தொழிலாளர் சங்கம் எனும் அமைப்பை உருவாக்கினர். இந்த அமைப்பு 1929இல் நாற்பத்திரொரு தொழிற்சங்கங்களையும், எழுபத்தையாயிரம் சங்கத்தவர்களையும் கொண்டிருந்தது. இது மார்க்சியப் பார்வையுடைய இளம் புரட்சிவாதிகளைக் கொண்டதாகவும், ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்தியாகவும் விளங்கியது. இந்த அமைப்பே 1930ஆம் ஆண்டு எல்சல்வடோர் கம்யூனிஸ்டு கட்சியை உருவாக்கியது. எல்சல்வடோரின் மத்திய மலைப்பகுதிகளில் நிலவிய கடும்பஞ்சமும், வேலை இல்லாப் பிரச்சினையும், நிலத்தை இழந்த மக்களின் நிராதரவான நிலையும் அரசாங்கத்திற்கு எதிரான அரசியல், தொழிற்சங்கப் போராட்டத்திற்கு சாதகமான சூழ்நிலையை உருவாக்கியது. பெரும்பாலும் இப்பிரதேசங்களிலேயே அரசிற்கு எதிரான எதிர்ப்பு சக்திகள் செல்வாக்குப் பெற ஆரம்பித்தன.

இவ்வாறன சூழ்நிலையில் 1931 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் எல் சல்வடோரின் தொழிற்கட்சியை சேர்ந்த அராயோ நகர்ப்புறத் தொழிலாளர்கள் புத்தி ஜீவிகளது ஆதரவுடன் பதவிக்கு வந்தார். இவர் மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான சில சட்டங்களை கொண்டு வந்ததுடன் உப ஜனாதிபதியாக இராணுவ ஜெனரல் மாட்டினஸ் என்பவரைத் தேர்ந்தெடுத்தார். பதவிக்கு வந்த ஒன்பது மாதங்களில் ஜெனரல் "மாட்டினஸ்" இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றினர். இவருக்கு நாட்டின் நிலப்பிரபுக்கள் செல்வந்தர்கள் ஆதரவு அளித்தனர். 1932 இல் கம்யூனிஸ்டு கட்சியின் தீவிரவாதக் குழுவினர் திடீர் புரட்சி ஒன்றினால் ஆட்சியைக் கைப்பற்ற முனைந்தனர். இந்த முயற்சி முறியடிக்கப்பட்டது. அதன் முக்கிய தலைவர்களுக்கு 1932 பிப்ரவரி மாதம் முதலாம் தேதி மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. அனைத்து அரசியல் கட்சிகளின் தொழிற்சங்கங்கள் அரசினால் தடைசெய்யப்பட்டன. அரசிற்கு எதிராக இயங்கிய எவரும் கம்யூனிஸ்டு என்று பெயர் சூட்டப்பட்டுத் தண்டிக்கப்பட்டனர். இராணுவம் படுகொலைகள் செய்தது. காட்டுமிராண்டித்தனமான செயல்களை கட்டவிழ்த்துவிட்டது.

எல்சல்வடோர் சர்வாதிகார ஆட்சியாளரின் பயங்கரவாதக் கருவியாக இயங்கிவரும் இரகசியப் பொலிஸ் அமைப்பை மரணப்படை (Death squad) என்று அழைப்பதுண்டு. இந்த மரணப் படை இரவில் தனது பயங்கரவாதத்தை கட்டவிழ்த்துவிடும். திடீரென இரவில் வீடுகளுக்குள் புகுந்து சந்தேக நபர்களை கைதுசெய்து செல்வது இந்த மரணப் படையின் கைங்கரியங்களில் ஒன்று. இவ்விதம் இரவில் கைதுசெய்யப்படுவோர் மாயமாக மறைந்துவிடுவார்கள். சில சமயங்களில் கட்டுக்கொல்லப்பட்ட பிணங்கள் வீதியோரங்களிலும் குப்பைத் தொட்டிகளிலும் போடப்பட்டிருக்கும். புரட்சித் தலைவர்கள், இடதுசாரிப் புத்திஜீவியர், கல்விமான்கள், முற்போக்கு அரசியல்வாதியர், புரட்சிக்கு ஆதரவான பொதுமக்கள் — இப்படியாகப் பலர் இந்த மரணப் படையின் பயங்கரவாதத்திற்குப் பலியாகியுள்ளனர். எத்தனையோ குடும்பங்கள் மாயமாக மறைந்துள்ளன. அரச பயங்கரவாதத்தின் மிகக் கொடூரமான நாசகாரக் கும்பலாக இந்த மரணப்படை இயங்கி வருகிறது.

இத்தகைய சூழ்நிலையில் அமெரிக்க ஏகாதிபத்தியம் எல் சல்வடோர் சர்வாதிகார இராணுவ ஆட்சியினருக்கு ஆயுத தளவாடங்களையும் இராணுவ ஆலோசகர்களையும் வழங்கியது. பொருளாதார முதலீடுகளைச் செய்து தனது நவகாலனித்துவ சுரண்டல் முறையையும் அந்நாட்டில்








தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவால்

www.eelamview.com

www.eelamview.com

# ல்வடோர்





நிலைப்படுத்தியது. எல் சல்வடோரிலும் அனைத்து லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் வளர்ந்துவரும் விடுதலை இயக்கங்களை அடக்குவதற்காக அந்நாட்டு அரசுகளுக்கு உதவும் நோக்குடன் 1964 இல் CONDCCA எனும் ஸ்தாபனம் அமெரிக்காவில் உருவாக்கப்பட்டது. இதனூடாக எல்சல்டோரின் இராணுவம், கடற்படை ஆகாயப் படை, தேசிய பாதுகாப்புப் படை, பொலீஸ் படை எல்லாம் பலப்படுத்தப்பட்டன. பெருமளவு இராணுவ பொருளாதார உதவிகளை அமெரிக்கா வழங்கியது மட்டுமின்றி இவ்வுதவிகளை ஒவ்வொரு வருடமும் இரு மடங்காக்கியது.

எல்சல்வடோருக்கான அமெரிக்க உதவி
(மில்லியன் டாலரில்)

| | 1982 | 1983 | 1984 | 1985 |
|---|---|---|---|---|
| இராணுவ உதவி | 82.00 | 81.30 | 196.50 | 128.20 |
| பொருளாதார உதவி | 182.20 | 231.10 | 331.15 | 326.10 |

1969 இல் எல்சல்வடோருக்கும் கொண்டுராஸ் நாட்டிற்கும் இடையே ஏற்பட்ட யுத்தத்தினை அடுத்து கொண்டுராஸ் நாட்டிற்கு அகதிகளாக குடி பெயர்ந்த மூன்று இலட்சம் எல்சல்வடோர் மக்கள் தமது தாய் நாட்டிற்கு மீண்டும் திரும்ப வேண்டிய நிலைக்குள்ளாகினர். இதன் விளைவு ஏற்கனவே எல்சல்வடோரில் தலைவிரித்தாடிய வேலை இல்லாத் திண்டாட்டத்தையும், நிலப் பிரச்சினையையும் பன்மடங்கு அதிகரிக்கச் செய்தது. ஆயிரக்கணக்கான மக்கள் பசியாலும் பட்டினியாலும் மரணமடைந்தனர். நாடு சீர்கேடான நிலையை அடைந்தது. 1970 இன் முற்பகுதியில் நாட்டின் இராணுவ ஆட்சியாளர்களுக்கு எதிராக பல வேலைநிறுத்தங்கள் மாணவர்களது ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. உள்ளூர் தேர்தல்களில் எதிர்க்கட்சிகள் வெற்றி பெற்றன. கத்தோலிக்க திருச்சபை மக்களுக்கு ஆதரவாகத் திரும்பியது. மோசடியும் ஊழலும் நிறைந்த தேர்தல்களின் மூலம் இராணுவ அரசிற்குச் சார்பான கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியினரே பதவிக்கு வந்தனர். எதிர்க்கட்சிகள்யாவும் அடக்குமுறைக்குள்ளாயின பலர் நாடு கடத்தப்பட்டனர், பலர் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டனர். சன்சல்வடோரின் ஆர்ச்பிஷப் உட்பட பல மதகுருக்களும் படுகொலை செய்யப்பட்டனர். அரசபயங்கரவாதம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உதவியுடன் தொழிலாளர்கள், விவசாயிகள், ஏழைகள், சாதாரண பொது மக்கள், புத்தி ஜீவிகள், மதகுருமார்கள் என்று அனைத்து மக்கள் மீதும் பாய்ந்தது.

அரசியல் உரிமைகள் அனைத்தும் பறிக்கப்பட்டு படுமோசமான பொருளாதார சுரண்டலுக்கும் அடக்குமுறைக்கும் உள்ளாக்கப்பட்டது எல்சால்வடோர். மக்களது உரிமைகளை மீட்கவும் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவும் அதுவரை தனித்து இயங்கிவந்த நான்கு கெரில்லா அணிகள் 1980 அக்டோபர் மாதம் ஒன்று சேர்ந்ததன் மூலம் FMLN (FARABUNDO MARTI FRONT FOR NATIONAL LIBERATION) எனும் பலம் பொருந்திய கெரில்லா அணி உருப் பெற்றது. டிசம்பர் மாதம் FMLN கெரில்லாக்கள் நாடு தழுவிய பாரிய தாக்குதல்களை மேற்கொண்டதில் பல முக்கிய நகரங்கள் கெரில்லாக்கள் வசமாகியது. இதைத் தொடர்ந்து 1980 டிசம்பரில் நாட்டின் பிரதான அரசியல் கட்சிகளால் உருவாக்கப்பட்ட (FDR) DEMOCRATIC REVOLUTIONARY FRONT எனும் வெகுஜன அரசியல் ஸ்தாபனம் FMLN கெரில்லா அணியுடன் ஒரு பொதுவான அரசியல் இராணுவத் திட்டத்தின்கீழ் இணைந்தது. இது FMLN - FDR கூட்டணி என அழைக்கப்பட்டது. இவ்விணைப்பு எல்சல்வடோர் அரசுக்கு எதிரான மக்களின் ஆயுதப் போராட்டமாகவும் வெகுஜனப் போராட்டமாகவும் இரு முனைகளில் வெடித்தது. 1980 க்கும் 81க்கும் இடையில் நாற்பத்திரண்டு நகரங்கள் கெரில்லாக்கள் வசம் வந்தன. நாட்டின் 2/3 பகுதி இராணுவ நடவடிக்கைக்குட்படுத்தப்பட்டது. கெரில்லாக்கள் வசமிருந்த பெருந்தோட்டங்கள் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. எல்சல்வடோரின் இரண்டாவது பிரதான தலைநகரான சாந்த அன்னா நகரமும் கெரில்லாக்கள் வசமானதுடன் அங்குள்ள இராணுவத்தின் கீழ் மட்டத்தினர் கெரில்லா அணிகளோடு சேர்ந்து கொண்டனர்.

FDR ஸ்தாபனத் தலைவர்கள் சிலர் அரசினால் கைது செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டனர். இவர்களுக்கு வீதியில் நடமாடவோ, வீட்டில் இருக்கவோ முடியாததோர் நிலை ஏற்பட்டது. இக்காரணத்தினால், இதன் தலைவர்கள் எல்சல்வடோர் மக்களின் போராட்டத் தின் அரசியல் இராணுவ பொருளாதார நிலை பற்றி வெளிநாடுகளுக்குச் சென்று பிரச்சாரம் செய்வதென முடிவெடுத்தனர். இவர்களது போராட்டத்திற்கு, நிக்கரகுவா, கியூபா அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் உதவி புரிந்து வருவது குறிப்பிடத்தக்கது.

கெரில்லாப் போராட்டம் தீவிரம் அடைந்துவரும் அதே வேளை வெகுஜன அரங்கிலும் போராட்டங்கள் தொடர்ந்தன. தலைநகரான சன்சல்வடோரிலும் வேலை நிறுத்தங்கள், ஆர்ப்பாட்டங்கள் வெடித்தது. அரசு தன்னம்பிக்கையை இழக்க ஆரம்பித்தது. இதை இடைநிறுத்துவதற்காக 1982இல் தேர்தலில் பங்கு கொள்ளும்படி FMLN - FDR கூட்டணிக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோது கூட்டணி அதனை முற்றாக நிராகரித்தது. FMLN - FDR வசமிருந்த பிரதேசங்களில் எல்சல்வடோரின் இராணுவம் தரை மார்க்கமாகச் செல்லும்நிலை முற்றாகத் தடைபட்டது. இப்பிரதேசங்களில் சிவில் நிர்வாகம் கெரில்லாக்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது.

FMLN கெரில்லாக்களின் ஆயுதப் போராட்டமும் மக்களின் வெகுஜன எழுச்சியும் அரசாங்கத்தை நிலைகுலையச் செய்தது மட்டுமின்றி சர்வதேச அரங்கிலும் அதன் செல்வாக்கை இழக்கச்செய்தது. இதன் எதிரொலியை ஐக்கிய நாடுகள் சபையில் ஜனாதிபதி டுரேட் தாம் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தயார் என அறிவித்தார். எல்சல்வடோரின் லாபல்மா நகரில் டுரேட் அரசாங்கத்திற்கும் FMLN - FDR பிரதிநிதிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை ஆரம்பமானது. அரசு தரப்பில் பிரச்சினைக்கு ஏற்ற தீர்வு ஒன்றும் இல்லாததால் பேச்சு தோல்வியில் முடிவடைந்தது.

அமெரிக்காவின் முழு உதவியுடன் அரசாங்கம் தனது இராணுவ நடவடிக்கையை மேலும் வலுப்படுத்தியது. கெரில்லாக்களின் தாக்குதல்களினால் தரைமார்க்கமாக செயலிழந்த இராணுவத்திற்குப் பதிலாக விமானப்படையும், கப்பல்படையும் வலுப்படுத்தப்பட்டன. அமெரிக்காவின் ரீகன் நிர்வாகம் D.C. - 3, A.C. - 130 போன்ற குண்டுவீச்சுப் போர்விமானங்களை வழங்கிவருவதுடன் அவற்றை இயக்குவதற்கான விமானிகளையும் கொடுத்துள்ளது. பொதுமக்கள் மீதே ஆகாய விமானத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. 1983இல் மாத்திரம் 227 ஆகாயத் தாக்குதல்கள் இடம் பெற்றன. கடந்த நான்குவருட புள்ளி விபரங்களின் படி நாளொன்றிற்கு 30 குண்டுகள் வீதம் (7.5 டன் எடையுள்ளது) வீசப்பட்டன. 1235 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இம்மக்களுக்கு FMLN கெரில்லாக்கள் ஆகாயக் குண்டு வீச்சில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான சகல பாதுகாப்பு நடவடிக்கைகளையும் கற்பித்திருக்கின்றனர். இது அதிகளவு பலனை அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

1984ஆம் ஆண்டுக்கான சர்வதேச கணக்கெடுப்பின்படி எல்சல்வடோரின் 20% பகுதி FMLN - FDR கூட்டணியின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. இப்பிரதேசங்களில் அரசியல் நிர்வாகம், உணவு, கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு, நீதிபரிபாலனம் அனைத்தும் இவர்களால் நிர்வகிக்கப்படுகிறது. இப்பிரதேசங்களில் 500 மக்களுக்கு ஒரு PPL (Local Popular Power) எனும் அமைப்பும் இவை எல்லாம் ஒன்று சேர்ந்து "பொது அசெம்பிளி" எனும் அமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது. இத்தாபனமே மேற்கூறிய மக்களுக்கான சகல நிர்வாக முறைகளையும் நிர்வகிக்கின்றது.

யுத்த விமானங்கள், ஹெலிகொப்டர்கள், கவச வாகனங்கள், பீரங்கிகள் மற்றும் நவீனரக ஆயுதங்களை அமெரிக்கா பெருமளவில் குவித்து எல்சல்வடோர் ஆட்சியாளர்களுக்கு முண்டு கொடுத்து வந்தபோதும் FMLN கெரில்லாக்களின் ஆதிக்கம் நகரப்புறங்களிலும், கிராமங்களிலும் பலமடங்கு பெருகிவருகின்றது. ஆயுதப் போராட்டம் தீவிரமடைந்து வருகின்றது. கடந்த அக்டோபரில் 300 கெரில்லா வீரர்களைக் கொண்ட அதிரடிப் படையணி ஒன்று லாயூனியன் என்ற நகரிலுள்ள இராணுவப் பயிற்சி முகாம் ஒன்றைத் தாக்கியது. இந்தத் தாக்குதலில் 42 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் 60 பேர் படுகாயம் அடைந்தனர். தொடர்ந்து பல பொருளாதார நாசவேலைகளிலும் கெரில்லாக்கள் ஈடுபட்டு அரசாங்கத்திற்கு பெரும் பொருளழிவை ஏற்படுத்தினர். இதற்கிடையில் ஜனாதிபதி டுரேட்டின் புதல்வி இனெஸ் விடுதலைப் போராளிகளால் மிகவும் துணிகரமான முறையில் கடத்திச் செல்லப்பட்டார். சிறையிலுள்ள 34 போராளிகளை விடுவிக்குமாறு கெரில்லாக்கள் நிபந்தனை விதித்தனர். தனது மகளை மீட்பதற்கு வேறு வழியில்லை எனக் கண்ட ஜனாதிபதி இறுதியில் கெரில்லாக்களின் நிபந்தனையை நிறைவேற்றினார். ஜனாதிபதி இவ்விதம் விடுதலைப் போராளிகளுக்கு பணிந்தது இராணுவ தலைமைப்பீடத்திற்கு பெரும் கொதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

ஜனாதிபதி டுரேட்டின் சர்வாதிகார ஆட்சி பீடமும் அதன் அடக்குமுறை இயந்திரமான இராணுவமும் மேலும் மேலும் மக்களிடம் இருந்து அந்நியப்பட்டு வருகின்றன. அமெரிக்காவின் ஆலோசனையுடன் கண்துடைப்பாக மேற்கொள்ளப்பட்ட நிலச் சீர்திருத்தங்கள் எவ்வித பயனையும் அளிக்கவில்லை. இராணுவ அடக்குமுறையிலும் சுரண்டல் முறையிலும் படுமோசமான வாழ்க்கை நிலைக்கு தள்ளப்பட்ட மக்கள் விடுதலை வீரர்களுக்குப் பின்னால் அணி திரண்டு வருகிறார்கள். நகரப் பிறத்தொழிலாளர்களும், ஆயுதம் தாங்கிய கெரில்லாக்களாக மாறிவருகின்றார்கள். எல்சல்வடோர் மக்கள் போராட்டம் வெற்றியை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது.





வெளியிடப்பட்ட இராணுவ விஞ்ஞானப் புத்தகங்கள்.

www.eelamview.com

www.eelamview.com

# ஏப்ரல் 86




| இடம் | நாள் | தாக்குதல் விவரம் | விளைவு |
|---|---|---|---|
| யாழ்மாவட்டம் வல்வெட்டித்துறை | 1-4-86 | முகாமிலிருந்து கிளம்பிய இராணுவத்தின் மீது தாக்குதல் | இராணுவம் பின்வாங்கி முகாமில் பதுங்கியது. |
| கிளிநொச்சி கொக்காவில் | 2-4-86 | 34 வாகனங்கள் கொண்ட ராணுவ ரோந்துத் தொடர் மீது கண்ணிவெடித் தாக்குதல் | 25 இராணுவத்தினர் பலி. நவீன ஆயுதங்களும், வெடி பொருட்களும் கைப்பற்றப்பட்டன. எம்மவர் வதனன், பெஞ்சமின்,ஜோன், மோகன் வீர மரணம். |
| யாழ்மாவட்டம் தொண்டமானாறு | 4-4-86 | முகாமிலிருந்து வெளி வந்த ராணுவத்தினர் மீது தாக்குதல் | ராணுவத்தினர் முகாமுக்குள் பதுங்கினர். |
| மட்டக்களப்பு கரடியனாறு | 5-4-86 | 8 வாகனங்களில் வந்த இராணுவத்தினர் மீது ராக்கெட் தாக்குதல்.தொடர்ந்து 3 மணி நேர சண்டை | ஒருடிரக்.ஒரு கவச வாகனம் சேதம்.9 ராணுவத்தினர் மரணம் எமது வீரர் புவிராஜ் வீரமரணம். |
| யாழ்ப்பாணம் | 6-4-86 | கோட்டை முகாமிலிருந்து கிளம்பிய ராணுவம் வழி மறித்துத் தாக்கப்பட்டது | பின்வாங்கி முகாமில் பதுங்கினர். கோட்டை முகாம் பாதுகாப்பு அரண் சேதம் அதிலிருந்த ராணுவத்தினர் பலி. |
| யாழ் மாவட்டம் தொண்டமானாறு | 8-4-86 | ராணுவ உயரதிகாரி மீது தாக்குதல் | அதிகாரி ஸ்தலத்திலேயே மரணம். ராணுவத்தினர் படுகாயம். |
| திருகோணமலை சிறிமாபுரம் | 10-4-86 | ராணுவ வாகனத் தொடர்மீது கண்ணிவெடித் தாக்குதல் | 8 ராணுவத்தினர் சாவு. ராணுவ வாகனத் தொடர் பின்வாங்கல். |
| திருகோணமலை சேனையூர் | 11-4-86 | சேனையூரை நோக்கி வந்த ராணுவத்தினர் மீது தாக்குதல் | 6 ராணுவத்தினர் கொல்லப்பட்டனர் மற்றவர்கள் பின்வாங்கினர். |
| திருகோணமலை கிண்ணியா | 12-4-86 | சிங்கள ஊர்க்காவல் படையினர் இருவர் சுடப்பட்டனர் | இருவரும் மரணம். |
| திருகோணமலை | 14-4-86 | போராளிகள் போல் வேடமிட்டு இஸ்லாமியத் தமிழரைத் தாக்கச் சென்ற ராணுவத்தினர் மீது தாக்குதல். | ஒருவர் பலி, ஒருவர் படுகாயம். பிற ராணுவத்தினர் தப்பி ஓடினர். போராளிகளுக்கு நேர இருந்த அவப் பெயர் தடுக்கப்பட்டது. |
| திருகோணமலை மியாந்தர் | 15-4-86 | அதிகரித்துவரும் ராணுவ அட்டகாசத்தைத் தடுக்க பதிலடி. வாகனத் தொடர் மீது கண்ணி வெடித் தாக்குதல். | ஒரு ராணுவ வாகனம் சேதம் உயரதிகாரி உட்பட 6 ராணுவத்தினர் சாவு. |
| யாழ்மாவட்டம் நாவற்குழி | 16-4-86 | இராணுவ முகாமிலிருந்து கிளம்பிய படையினர் மீது தாக்குதல் | தாக்குதலுக்கு ஈடு கொடுக்காமல் பின்வாங்கினர். பலர் சாவு, பலர் படுகாயம். விடுதலைப் புலி முரளி வீரமரணம். |
| யாழ்ப்பாணம் | 17-4-86 | கோட்டை முகாமிலிருந்து ரோந்து வந்த ராணுவத்தினர் மீது தாக்குதல் | அபயசிங்கா, கருணாரட்ன, சகபந்து என்ற மூன்று கார்ப்பொரல்கள் மரணம். பலர் காயம். |
| நாவற்குழி | 17-4-86 | இராணுவ முகாமிலிருந்து யாழ் குடா நாட்டை முற்றுகையிடப் புறப்பட்ட ராணுவத்தினர் மீது தாக்குதல் | தமது படையெடுப்பை பாதியில் கைவிட்டு இறந்தோரையும், காயமுற்றோரையும் தூக்கிக் கொண்டு பின்வாங்கினர். விடுதலைப்புலி ஜெரி மரணம். |
| மொரவேவா | 18-4-86 | திருகோணமலை மக்களுக்கு தொல்லைகள் கொடுத்த விமானப் படையினரை அடக்கும் பொருட்டு, அவர்களது வாகனத் தொடர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது தொடர்ந்து கடும் சண்டை மூண்டது. அருகிலிருந்த மொரவேவா முகாமிலிருந்தும், பன்குளம் விமானப்படைத் தளத்திலிருந்தும் உதவிப் படைகள் வந்தன. | இராணுவ டிரக் ஒன்று தகர்க்கப்பட்டது. அதிலிருந்த விமானப் படையினர் சாவு. பன்குளம் விமானப் படையினரின் ஜீப் ஒன்று சேதம். அனைவரும் பின் வாங்கினர். பலர் படுகாயம். 23 விமானப் படையினர் மரணம். |
| மொரவேவா | 18-4-86 | மொரவேவா காவல் நிலையத்திற்கு மின்சாரம் வழங்கி வந்த டிரான்ஸ்பார்மர் தகர்ப்பு | காவல் நிலையத்திற்கு மின்சாரம் துண்டிப்பு. |
| மட்டக்களப்பு | 19-4-86 | பொது மருத்துவமனையருகில் ரோந்து சென்ற போலீஸ் ஜீப் மீது தாக்குதல் | போலீஸ் அதிகாரி சாவு. 4 போலீசார் படுகாயம். ஜீப் சேதம். |
| பருத்தித்துறை | 20-4-86 | பருத்தித் துறையில் கொலை, கொள்ளை, தீவைப்பு முதலியவற்றில் ஈடுபட்ட ராணுவத்தைத் தடுக்க புலிகள் காவல் நின்றனர். மீறி நுழைய முயன்ற ராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் லெப்டினன்ட் கந்தன், லெப். ரமணன் ஆகிய புலிகள் இறந்தனர். இதைத் தொடர்ந்து எமது அதிரடிப்படை தாக்குதலில் இறங்கியது. | பல மணிநேர சண்டைக்குப்பின் அவர்கள் பின் வாங்கினர். 5 ராணுவத்தினர் சாவு. இருவர் படுகாயம். |
| யாழ் மாவட்டம் தொண்டமானாறு | 21-4-86 | தமிழ்க் கலாச்சாரத்தின் மீதான தாக்குதலாக தொண்டமானாற்றிலுள்ள இந்துக் கோயிலை அழிக்க முயன்றனர். தீவைப்பில் ஈடுபட்டனர். தகவலறிந்ததும் எமது படைகள் தாக்கின. ஒரு பிரிவு உதவிப் படைகளைத் தடுத்தது. குண்டு வீச்சு விமானமும் ஹெலிகாப்டரும் தாக்குதலில் இறங்கின. | விமானத் தாக்குதலின் பாதுகாப்பில் இராணுவத்தினர் பின்வாங்கினர். 12 ராணுவத்தினர் சாவு. பலர் காயம். பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. |
| புலிபாய்ந்த கல் | 21-4-86 | இங்குள்ள எமது முகாமை வாகனேரி, வாகரை, மொறக்கொட்டாஞ்சேனை, கும்புறுமூலை முதலிய இடங்களிலுள்ள ராணுவமும் போலீசும் முற்றுகையிட்டனர். இதை முன்கூட்டி அறிந்த எம்மவர்கள் சுற்றிவளைத்துத் தாக்கினர். | விமானப்படையின் ஹெலிகாப்டர்கள் மூலம் இராணுவத்தினர் தப்பினர். 4 பேர் சாவு. 15 பேர் படுகாயம். எம் தரப்பில் நிர்மலன் வீரமரணம். |
| திருமலை | 24-4-86 | இராணுவத்தின் அட்டகாசங்களால் அகதிகளாக வெளியேறிய மக்களின் வீடுகளைக் கொள்ளையடித்தது ஊர்காவல்படை. கன்னியா வெந்நீரூற்றருகே இவர்கள் இம்முயற்சியில் இறங்கியபோது ஒரு வீட்டின் ஜன்னலில் செருகி வைத்திருந்த குண்டு வெடித்தது. தொடர்ந்து எமது வீரர்கள் அவர்களை விரட்டினர். | குண்டு வெடிப்பில் இருவர் மாண்டனர். பலர் காயங்களுடன் தப்பினர். ஒரு வேட்டைத் துப்பாக்கி கைப்பற்றப்பட்டது. |
| ஈச்சிலம்பத்தை மூதூர் | 25-4-86 | இருபது வாகனங்களில் சுமார் 175 இராணுவத்தினர் இங்குள்ள எமது முகாமைத் தாக்கினர். எம்மவர்கள் கடுமையான தாக்குதலை மேற்கொண்டு அவர்களை விரட்டினர். | பலத்த இழப்புகளுடன் ராணுவம் பின்வாங்கியது. எமது தரப்பில் மதன், கரன் ஆகியோர் வீரமரணம். |
| மட்டக்களப்பு | 28-4-86 | அம்பந்துறைக்கும் பழுகாமத்திற்கும் இடையே ராணுவ ரோந்துப்படை மீது தாக்குதல். இறந்த, காயமுற்ற ராணுவத்தினரின் உடல்களை எடுக்க விடாமல் தாக்குதல் தொடர்ந்தது. ராணுவத்தின் உதவிக்கு குண்டு வீச்சு விமானங்களும் ஹெலிகாப்டர்களும் குண்டுகளை வீசின. | 8 ராணுவத்தினர் சாவு. பலர் படுகாயம். எமது தரப்பில் சேதங்களில்லை. |
| யாழ்ப்பாணம் | 17-5-86 – 24-5-86 | எட்டு நாட்களாக பெருந்தாக்குதலில் ஈடுபட்ட ராணுவம் முறியடிக்கப்பட்டது. கிளிநொச்சி, ஆனையிறவு, காரைநகர், பலாலி, யாழ்கோட்டை, வல்வெட்டித்துறை, நாவற்குழி, காங்கேசன்துறை முதலிய ராணுவ கடற்படை முகாம்களிலிருந்து வந்த சிங்களப் படையினர் முறியடிப்பு | 75க்கு மேற்பட்ட ராணுவத்தினர் சாவு. பலர் படுகாயம். 4 கவச வாகனம், 2 ஹெலிகாப்டர்கள், 3 பீரங்கிப் படகுகள், 1 கடற்படைக்கப்பல் சேதமாயின. 9 இளம்புலிகள் வீரமரணம். |

www.eelamview.com

www.eelamview.com

# போர்முனையில் புலிகள்



யாழ்குடா நாட்டைப் போலவே தமிழீழத்தின் ஏனைய பகுதிகளையும் சிங்கள பாசிச அரசிடம் இருந்து விடுவிப்பதற்கும், அங்கிருந்து அரசபடைகளை விரட்டியடிப்பதற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் முனைப்புடன் போரிட்டு வருகின்றனர். குடாநாட்டு நிலைமை தமிழீழத்தின் வட பகுதி முழுவதிலும் வேகமாகப் பரவுகிறது. இந்த வகையில் கடந்த 4/6/86 அன்று கிளிநொச்சி மாவட்டத்தில் சிங்கள இராணுவத்தினர் மீது புலிகளின் உக்கிரமான தாக்குதல்கள் ஆரம்பித்தன. கிளிநொச்சி இராணுவ - பொலிஸ் கூட்டு முகாம் எமது அதிரடிப்படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு கடுமையான தாக்குதலுக்குட்படுத்தப் பட்டது. முகாமிலிருந்து வெளியே வர முயன்ற கூலிப் படையினர் எமது ஆவேசத் தாக்குதல்களுக்கு ஈடு கொடுக்க முடியாது பாரிய இழப்புகளுடன் முகாமுக்குள் பின்வாங்கி பதுங்கிக் கொண்டனர். முகாமின் பாதுகாப்பு அரண்கள் எமது ராக்கெட் தாக்குதலினுல் தகர்க்கப்பட்டன.

இவர்களுக்கு உதவுவதற்காக ஆனையிறவு இராணுவமுகாமிலிருந்து புறப்பட்ட 200க்கு மேற்பட்ட இராணுவத்தினரை எமது அதிரடிப்படையின் மற்றொரு பிரிவு வழியில் இடைமறித்துத் தாக்கியது. இந்த தாக்குதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். எமது தாக்குதலுக்கு முகம் கொடுக்கமுடியாத சிங்களப் படையினர் பின்வாங்கி ஆனையிறவு இராணுவ முகாமினுள் ஓடி ஒளித்து கொண்டனர்.

மேலும் அரச படைகளது நடமாட்டத்தை கட்டுப்படுத்தும் பொருட்டு இருவையாறு, பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி, கண்டிவீதி ஆகிய இடங்களில் உள்ள முக்கிய பாலங்கள் எமது கெரில்லா அணிகளால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டன. இதனுல் உதவிகள் எதுவும் கிடைக்காத நிலையில் இராணுவத்தினர் விமானப்படையின் உதவியை நாடினர். இதனைத் தொடர்ந்து குண்டு வீச்சு விமானங்களும், ஹெலிகாப்டர்களும் குண்டுகளை வீசியும், இயந்திரத் துப்பாக்கியால் சுட்டும் குடிமக்கள் வசிக்கும் பகுதிகளை நோக்கி தாக்குதல் நடத்தின. ஆனுல் எமது வீரர்களின் மூர்க்கத்தனமான தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாமல் அவை பின்வாங்கின.


தொடர்ச்சியான எமது அதிரடித்தாக்குதலினுல் சிங்களப் படை நிலைகுலைந்து, உறுதியிழந்து முகாமினுள் முடங்கிக் கிடக்கிறது. ஆட்டம்கண்ட அரசு கிளி நொச்சி பகுதியில் இரவு, பகலாக தொடர்ந்து ஊரடங்குச்சட்டத்தை அமுல்படுத்தியது. ஆனுல், ஊரடங்குச்சட்டம் அமுல் படுத்தப்பட்டிருந்த நேரத்தில் கூலிப்படையினர் வெளியே வரமுயன்றும் எமது ஆவேசத்தாக்குதலினுல் மீண்டும் விரட்டியடிக்கப்பட்டனர்.


எமது முற்றுகை ஆரம்பித்த நாளிலிருந்து கிளிநொச்சி இராணுவ முகாமுக்கான சகல விநியோகங்களும் எம்மால் தடுத்து நிறுத்தப்பட்டன. முகாமின் மீது மோட்டார், ராக்கட்லாஞ்சர், எறிகுண்டு செலுத்தி போன்ற நவீன ரக ஆயுதங்களைப் பயன்படுத்தி எமது கெரில்லா அணி அதிரடித்தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கிறது. இதுவரை நடந்த யுத்தத்தில் 27க்கு மேற்பட்ட இராணுவத்தினர் பலியாகியுள்ளனர். தொடர்ச்சியான, உறுதியான எமது போராட்டத்தினுல் விரைவில் கிளிநொச்சி பிரதேசம் எதிரிகளிடமிருந்து பூரணமாக விடுவிக்கப்படும்.

இதே போல் மன்னுர் மாவட்டத்தையும் சிங்கள இராணுவத்திடமிருந்து விடுவிக்கும் பொருட்டு விடுதலைப்புலிகள் தீரத்துடன் ஈடுபடுமுகமாக தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து 38 கவச வண்டிகளில் புறப்பட்ட இராணுவத்தினரை மாந்தை என்ற இடத்தில் எமது கெரில்லா அணி எதிர் கொண்டு தாக்கியது. காலை முதல் மாலை வரை கடும் சண்டை நடந்தது. இம் மோதலின் போது 2 கவச வண்டிகள் எமது அதிரடித்தாக்குதலினுல் முற்ருகத் தகர்க்கப்பட்டதுடன் 5க்கு மேற்பட்ட இராணுவத்தினர் உயிரிழந்தனர். தரைப்படைக்கும் உதவியாக விமானப்படையின் குண்டு வீச்சு விமானங்களும், ஹெலிகாப்டர்களும் தாக்குதலில் இறங்கின. ஆனுல் எமது தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாமல் அவை பின்வாங்கின. நீண்ட நேர யுத்தத்தின் பின் எமது தாக்குதலை சமாளிக்கமுடியாமல் சிங்கள கூலிப்படை தமக்கு ஏற்பட்ட இழப்புகளுடன் பின்வாங்கி முகாமுக்குள் பதுங்கிக்கொண்டது.

இவ்விரு மோதல்களின் போதும், கிளிநொச்சியில் நால்வரும், மன்னுரில் ஒருவருமாக மொத்தம் 5 விடுதலைப்புலிகள் வீரமரணமடைந்தனர். எமது வீரர்களின் தீரமும், தியாகமும் எமது மண்ணையும் மக்களையும் காக்க உதவியது. சிங்களப் படைகளை எமது மண்ணிலிருந்து விரட்டியடித்து பூரண விடுதலையை வென்றெடுக்கும் காலம் வெகுதூரத்திலில்லை.

www.eelamview.com







## உலகத்தின் பார்வையில்...

## Newsweek

எவ்வளவுதான் பணம் கிடைத்தபோதும் இராணுவரீதியான வெற்றியைப்பற்றி உத்தரவாதம் அளிக்கமுடியாது என்று இலங்கை இராணுவத் தளபதிகள் கூறியுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மிகவும் கட்டுப்பாடானதும் சித்தாந்த தெளிவுடையதுமான அணியாகும்.

நாட்டின் வடக்குக், கிழக்கு மாகாணங்களில் சுயாட்சியுள்ள தமிழீழ தனி நாட்டை அமைக்க கெரில்லாப் போர்புரியும் மிகத் தீவிரமான முற்போக்கான அணி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்தான்.

— நியூஸ்வீக் 19.5.86.



பிரபாகரனின் புலிப்படைக் கெரில்லா அணிதான் எல்லா கெரில்லா அணிகளையும் விட அதிக பழமையானதும், பெரியதும், மிகவும் கட்டுப்பாடானதுமாகும். பெரும்பாலான புலிகள் இளைஞர்களேயாவர். இவர்கள் கல்வித்துறையில் பல தடைகளை மீறி படித்து முன்னேறி வேலைவாய்ப்பின்றி பாதிக்கப்பட்டவர்களாவர். தாங்கள் கைப்பற்றப்படும் பட்சத்தில் பயன்படுத்துவதற்காக ஒவ்வொருவரும் சயனைட்டை உள்ளடக்கியுள்ள கண்ணாடிகுப்பி ஒன்றை தங்களது கழுத்தில் அணிந்திருந்தனர்.

'.... தமிழீழ விடுதலை இயக்கமானது (TELO) தனக்குள்ளேயே பதவிப் பலப்பரீட்சை காரணமாக வன்முறைகளைக் கொண்டிருந்தமையாலும், குற்ற நடவடிக்கைகளின் காரணமாகவும் கெட்ட பெயரைச் சம்பாதித்துக் கொண்டிருந்தது...'

'.... பிரச்சினை என்னவென்றால், " நாங்கள் உலகத்திலேயே மிகச் சேவலமான ஆயுதப் படைகளைக் கொண்டிருப்பதுதான்." என்று சிறிலங்காவின் மூத்த அதிகாரி ஒருவர் கூறினர்.

டைம் — 9.6.86.

## THE STATESMAN

இலங்கை அரசாங்கம் யாழ் படையெடுப்பின் மூலம் ஈழக் கோரிக்கையை உறுதியாக ஆதரிப்பவர்களை வெல்ல முடியாமல் போனதுடன், அவர்களது மனவலிமையையும் அதிகரிக்கச் செய்துள்ளது. இராணுவத் தாக்குதல் நடவடிக்கையின் பின்பு தமிழ்மக்கள் "புலிகளை" ஆக்கிரமிப்புப் படைகளிடமிருந்து தங்களைக் காப்பாற்றுபவர்களாகக் கணிப்பார்கள் ...

ஸ்டேட்ஸ்மன்
22.5.86

## SUNDAY

யாழ்பாணக்குடா நாட்டை பலவந்தமாக தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக மே மாதம் நடுப்பகுதியில் தக்க தருணம் பார்த்து ஒருவாரத்திற்கும் மேலாக சிறிலங்கா ஆயுதப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட மும்முனைத்தாக்குதல் நடவடிக்கைகளின்பின்னர் தமிழ்போராளிகள் குறிப்பாக விடுதலைப் புலிகள் அந்தப் பிரதேசத்தின் மீது உள்ள தங்களது கட்டுப்பாட்டை முறியடிக்க எவரும் சவால் விடமுடியாது என்று நிரூபித்துள்ளார்கள்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற போராளது குடாநாட்டில் விடுதலைப்புலிகள் அமைப்பு மட்டுமே தனித்து நின்று போரிடும் சக்தி என்பதை நிலைநிறுத்தியுள்ளது.

சண்டே — 8.6.86.

## THE HINDU

இந்திய இராணுவ நிபுணர்களின் கணிப்பின்படி தமிழீழ விடுதலைப்புலிகளின் கெரில்லாக்கள் தங்கள் சிறந்த போராட்ட யுக்திகளின் மூலம், குறைந்தளவு ஆயுதங்களை, மிகத் திறமையான முறையில் உபயோகித்து, மிக நவீன வசதி கொண்ட, ஆனல் செயல்திறனற்ற, மோசமாக வழிநடத்தப்பட்ட ஸ்ரீலங்கா இராணுவத்துக்கெதிராக சாதனை படைத்திருக்கின்றார்கள். பாலங்களைத் தகர்த்தும், முக்கியமான இடங்களில் கண்ணி வெடிகளை வைத்தும், படை மாற்றம் என்ற பெயரில், முற்றுகையிடப்பட்ட துருப்புகளுக்கு உதவிப் படைகள் வருவதை வெற்றிகரமாகத் தடுத்து விட்டனர்.

மேலும் மனேநிடமற்ற நிலையில், தமிழ்த்தீவிரவாதிகளை அடக்கப் புறப்பட்ட இலங்கை இராணுவத்தினர் தங்கள் இடங்களுள் மீண்டும் விரட்டப்பட்டு, இந்த தர்மசங்கடமான நிலையில் செய்வதறியாது அடைபட்டுக்கிடக்கின்றனர்.

ஹிந்து 25.5.1986

## FINANCIAL EXPRESS

"LTTEக்கு மரணஅடிகொடுத்து இராணுவப் பலத்தில் தங்களுக்கு சாதகமானநிலையை உருவாக்கிக் கொண்ட பின்னரே தமிழ்மக்களுடன் அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தையை வைத்துக்கொள்ளலாம் என்று J.R. ஜெயவர்த்தன எண்ணியுள்ளார்." என்று பிரபாகரன் வலியுறுத்திக் கூறினர். ஏனெனில் LTTE தான் இலங்கையிலுள்ள மற்றைய எல்லா தமிழ் தீவிரவாதக் குழுக்களிலும் பார்க்க அதிக பலம்வாய்ந்ததாகும்.

ஆனல் LTTEக்கு முடிவு கட்டுவது என்பது நினைத்துப்பார்க்க முடியாத ஒரு காரியமாகும். இலங்கைத் தமிழ்மக்களை அடியோடு நிர்மூலமாக்குவதன்மூலமே இதைச் சாதிக்கலாம் என்று பிரபாகரன் கூறினர். இலங்கைத் தமிழர்களது நிலம் இப்பொழுது புலிகளது நாடாக (NATION OF TIGERS) விரைவாக வந்துகொண்டு இருக்கின்றது என்றும், பெண்களும் இப்பொழுது LTTEஇல் சேருகின்றார்கள் என்றும் கூறினர். LTTE மக்களுடைய ஆதரவில் வளர்ந்து வருவதால் அதனை எவரும் அடிபணிய வைக்கமுடியாது என்றும், போதிய அளவு ஆயுதங்களும், நிதி உதவியும் கிடைக்கும் பட்சத்தில் எளிதாக தமிழீழத்தை விடுதலை செய்துவிடலாம் என்றும் பிரபாகரன் கூறினர்.

... சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தி இந்தியாவில் தற்காலிக அரசாங்கம் ஒன்றை நிறுவும் திட்டம் ஏதும் உண்டா என்று அவரிடம் கேட்கப்பட்டதற்கு அவர் 'ஈழத்தை விடுதலை செய்யமுடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. எனவே வெளிநாடுகளில் ஒரு தற்காலிக அரசாங்கம் அமைப்பதில் ஒரு அர்த்தமும் இல்லை' என்று கூறினர்.

— பைஞன்ஷியல் எக்ஸ்பிரஸ் 2.6.86

## Newstime

யாழ் குடா நாட்டை சிறிலங்காப்படைகள் கைப்பற்றுவதிலிருந்து தடுத்த பெருமை தமிழ்ப்போராளிகளுக்கு குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கே உரியது.

ஈழத்தில் உண்மையான போராட்ட சக்தியாக இருப்பவர்களும், அதில் சிறந்து விளங்குபவர்களும் தமிழீழ விடுதலைப்புலிகளே.

'டெலோ மீதான விடுதலைப் புலிகளின் நடவடிக்கை, தமிழீழ விடுதலைப் புலிகளை மக்களிடமிருந்து பிரித்துவிட்டது என்று கூறுவதில் எவ்வித உண்மையும் இல்லை. பொதுமக்களிடமிருந்து கொள்ளையடிக்கும் ஒழுக்கக்கேடான காடையர் கூட்டத்தை டெலோ கொண்டிருந்ததால், அவ்வியக்கம் பொதுமக்களிடம் மோசமான பெயரைப் பெற்றிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் பொதுமக்களைத் தாமாகவே உதவி அளிக்க வேண்டுகிறர்களே தவிர அவர்களிடம் கொள்ளையடிப்பதோ பறிப்பதோ இல்லை. அவர்கள் ஒவ்வொரு குடும்பத்தவரையும் அவரவர் வசதிக்கு ஏற்ற அளவையே கொடுக்கும்படி வேண்டுகின்றனர். போராட்ட நடவடிக்கைகளுக்காகப் பெற்ற வாகனங்களையும் உபயோகித்த பின்பு திரும்பக் கொடுத்து விடுகின்றனர்.

— திரு. சிவநாயகம் பேட்டி
நியூஸ் டைம் 26.5.86.



வடக்குக் கிழக்குப்பகுதிகளில் தனிநாடு அமைப்பதற்காகப் போராடும் தமிழ்ப்புரட்சிக் குழுக்களுக்குள்ளே LTTE தான் மிகப் பெரியதும், அதி தீவிரம் வாய்ந்ததுமாகும்.

சிங்கள ராணுவமானது முன்னர் போதிய வீரர்களோ, தரமான ஆயுதங்களோ இன்றி இருந்தது. ஆனல் அண்மைக்காலத்தில் குறிப்பிடத்தக்க அளவு பலம் பெற்றுள்ளது. தரைப்படை, விமானப்படை, கடற்படை ஆகியவைகளில் கடந்த வருடம் மொத்தம் 28,000 பேரே இருந்தார்கள். இப்பொழுது, அதிக அளவில் புதிதாக ஆட்கள் சேர்க்கப்பட்டு இந்த எண்ணிக்கை 40,000 ஆக உயர்ந்துள்ளது. இவைகளில் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் வடக்கிலேயே நிலை கொண்டுள்ளனர். நாட்டின் பாதுகாப்பு செலவானது 10 பில்லியன் ரூபாவை (கிட்டத்தட்ட 360 மில்லியன் டாலர் கடந்து விட்டது. இது நாட்டின் மொத்த வரவு செலவு திட்டப்பணத்தின் 20% ஐ விழுங்கிவிட்டது. தென் ஆபிரிக்காவில் இருந்து 150 கவசவாகனங்கள் தருவிக்கப்பட்டு ராணுவத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. சிங்கப்பூரில் இருந்து 21 அமெரிக்க தயாரிப்பு ஹெலிக்காப்டர்கள் வாங்கப்பட்டுள்ளன. இத்தாலியிடம் இருந்து 6 இலகு போர் விமானங்கள் வாங்கப்பட்டுள்ளன. இதைத்தவிர 50 புதிய ரோந்துப்படகுகளும் கிட்டத்தட்ட 40,000 நிலக்கண்ணிகளும், வாங்கப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான ராணுவ உத்தியோகஸ்தர்கள் ராணுவ பயிற்சிக்காக பாகிஸ்தான் சென்றுள்ளார்கள். ராணுவத்திற்கு பயிற்சியளிப்பதற்காக, இங்கிலாந்தில் இருந்தும் இஸ்ரேலில் இருந்தும் பாதுகாப்பு நிபுணர்கள் கொழும்புக்கு கொண்டுவரப்பட்டுள்ளார்கள்.

கட்டுப்பாடில்லாத TELO அமைப்பே ஒழுங்கினம் அனைத்திற்கும் காரணம் என்று குற்றம் சாட்டப்படுகின்றது.

'எங்கள் எல்லோரையும் பற்றி அவர்கள் (TELO) நன்கு தெரிந்து வைத்துக்கொண்டு எங்களிடம் உள்ளவைகளை அச்சுறுத்தி பறித்துக் கொண்டார்கள். ஆனல் LTTE இப்படி ஒருபோதும் செய்தது கிடையாது.' என்று மேலும் ஒருவர் கூறினர்.

'TELOக்கும் LTTEக்கும் இடையே நடைபெற்ற சண்டையின்போது பலபேர் கொல்லப்பட்டதைவிட்டு நாங்கள் வருந்துகிறேம். ஆனல் இனிமேல் நாங்கள் தொந்தரவுக்கு உள்ளாக மாட்டோம்' என்று யாழ்பாணவாசி ஒருவர் கூறியுள்ளார்.

ஆசியா வீக் 1.6.86.

## DECCAN HERALD

துருப்புக்கள் தமது முகாம்களில் இருந்து வெளியேவர மேற்கொண்ட முயற்சியானது கெரில்லாக்களது கடும் எதிர்ப்புக் காரணமாக நிறைவேறுமல் போய்விட்டது. இவ்வாறு முதல்கட்டம் முடிவடைந்தது. தமிழ் கெரில்லாக்கள் பொதுமக்களின் ஆதரவைப் பெற்றிருப்பதோடு நல்ல ஆயுதபலம் உள்ளவர்களாகவும், இலட்சியப்பற்று உள்ளவர்களாகவும், காணப்படுகின்றமையால் சிறிலங்கா ராணுவம் தமிழ்க் கெரில்லாக்களின் கட்டுப்பாட்டில் உள்ள நாட்டின் வடக்குப் பகுதியை தமது ஆதிக்கத்துக்குள் கொண்டுவர முடியாது.

— டெக்கான் ஹெரால்டு — 22.6.86.

## INDIA TODAY

ஃபிடல் காஸ்ட்ரோவின் கெரில்லா இயக்கம் போல அமைக்கப்பட்டுள்ள உயர்ந்த கட்டுப்பாடானதும், நன்கு வலிமையாக்கப்பட்டதுமான தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பிரதான சிற்பியாக பிரபாகரன் இருக்கின்றார்.

'நாங்கள் எங்கள் மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கிறேம். எங்கள் மக்களின் அபிலாசைகளுக்கு எதிராக இந்திய அரசாங்கம் செயல்படும் என நாங்கள் எண்ணவில்லை. எங்களுக்கு இந்தியாவின் ஆதரவு மிகவும் முக்கியமானது. ஆனுலும் எங்கள் தலைவிதியை நிர்ணயிப்பதற்கான உரிமை எங்களுக்கும் உண்டு'. என்று பிரபாகரன் கூறினர்.

சிறிலங்காவின் இறுதித்தாக்குதல் நடவடிக்கை தோல்வியில் முடிவடைந்தது என்பது உண்மையாகும். சிறிலங்கா ராணுவத்திரவுகாண எடுத்துக்கொண்ட முயற்சியானது மிகத்தவறான ஆலோசனை மூலம் நடைபெற்றது என்பதையே அது காட்டுகின்றது.

கடைசியாக நடந்த சிறிலங்கா அரசாங்கத்தின் தாக்குதலுக்குப் பின்னர் முக்கியமான புதிய








www.eelamview.com








திருப்பம் ஏற்பட்டுள்ளது. போராளிகள் அடைந்த உத்திரீதியான, தார்மீக வெற்றியானது போராளிகளுக்கு உளவியல் ரீதியான எழுச்சியை அளித்துள்ளதுடன், ஈழத்துக்கான ஆயுதப்போராட்டத்தை தொடருவதற்கு, எப்போதும் இல்லாதவாறு அவர்களை உறுதி படைத்தவர்களாக்கியுள்ளது.

— இண்டியா டுடே 15.6.86.




இராணுவரீதியாக எங்களை மேலும் பலப்படுத்துவதே தற்போதைய எங்களது போர்த் தந்திரமாகும். இன்னும் அதிகமான அங்கத்தவர்களுக்கு பயிற்சியும் ஆயுதமும் கொடுத்து எங்களது ராணுவக் கட்டுமானத்தை விரிவாக்கவேண்டும். மிகவும் தாக்கமான விமான எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடர்பாக நாங்கள் விரைவாக முன்னேறிக் கொண்டுவருகிறோம்.

டாக்டர் A.S. பாலசிங்கத்தின் பேட்டி

'... கொழும்பு தனது தாக்குதல் நடவடிக்கைகள்மூலம் குறிப்பிட்ட சில குறிக்கோள்களைச் ~~சாதித்துவிட்டதாகக் கூறுகின்றது~~. இக்குறிக்கோள்கள் என்னவென்று தெரியவில்லை. புலிகள்தான் இப்பொழுதும் வடக்கில் மிகவும் பலம்வாய்ந்த நிலையில் உள்ளார்கள் என்பதைப்பற்றி ஒருவருக்கும் சந்தேகம் இல்லை...'

தற்பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட போராளிகள் தங்களது வேகமான இடுக்கிப் பிடித் தாக்குதல் மூலம் எதிரியின் முன்னேற்றத்தைத் தடுத்தார்கள். முற்றுகையை முறியடித்து முகாம்களில் இருந்து வெளியேறமுயன்ற படைகளுக்கெதிராக புலிகள் மிகவும் துரிதமான தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலம் அரசாங்கத்தின் யுத்த தந்திரோபாயத்தை தோல்வியடையச் செய்துள்ளனர். புலிகள், சாதாரண பொது மக்களின் உதவியுடன் பாதைகளில் மணல் மூட்டைகளைப் போட்டு தடையரண்களை உண்டாக்கியதன்மூலம் படைகளது முன்னேற்றத்தைத் தடுத்துள்ளார்கள். அரசாங்கப் படைகளது கவசவாகனங்கள் இவ்வாறு இடைமறிக்கப்பட்டும், தகர்க்கப்பட்டுமுள்ளன. அநேகமாக எல்லாமுனைகளிலும் முகாம்களில் இருந்து இராணுவத்தினர் புறப்பட்ட போது அவர்களைத்தாக்க புலிகள் தயாராக இருந்தார்கள்.

தமிழ்ப் போராளிகள் பலம்வாய்ந்த நிலையில் இருக்கும் யாழ்ப்பாணத்தின் மீது கொழும்பு முழு அளவிலான தாக்குதலை நடத்தியது. இதன்போது சிங்கள ராணுவம் நன்குக வாங்கிக் கட்டிக்கொண்டது. போராளிகள், குறிப்பாக பலம்பொருந்திய தமிழீழ விடுதலைப் புலிகள் தமது பிரதேசத்தை தொடர்ந்து தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதோடு அரச துருப்புக்களையும் பின்வாங்கி ஓடச் செய்துள்ளனர். இதற்கு முன்னர், தலைநகர் உட்பட அரசாங்கக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலும் ஆழமாக ஊடுருவி தாக்கியுள்ளார்கள்.

— 'தி' வீக் 8.6.86

# NEWS TODAY

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பிரதேசங்களில் வாழும் தமிழ்மக்கள்மீது தொடுக்கப்பட்டுள்ள இனப்படுகொலைப் போருக்காக சிறிலங்கா அரசாங்கம் பிரிட்டிஷ் கூலிப்படைகளை வேலைக்கமர்த்திவிருப்பது இப்பொழுது உறுதியாகிவிட்டது. இந்தக் கூலிப்படையினர் 'போர் நாய்கள்' என்ற அடையாளப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றார்கள். ஒரு மதிப்பீட்டின்படி இரண்டு மாதத்திற்கு முன்னர் அவர்களது எண்ணிக்கை ஒரு டஜனுக்கு கூடுதலாக இருந்தது. மே மாதக் கடைசி வாரத்தின்போது இந்த எண்ணிக்கை 75ஆக அதிகரித்துள்ளது.

விமானங்களையும், இயந்திர துப்பாக்கி பொருத்தப்பட்ட ஹெலிகாப்டர்களையும் ஓட்டி தமிழ்ப்பிரதேசங்களின் மீது குண்டு போடுவதே இவர்களுக்கு அளிக்கப்பட்ட வேலையாகும். கொழும்பின் புதிய விமானிகளை பயிற்றுவிக்க இவர்களில் 1 டஜன் பேர் அமர்த்தப்பட்டுள்ளனர்.

75 பேர் அடங்கிய 'போர் நாய்கள்' 3 குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். அதில் 2 குழுக்கள் தமிழருக்கு எதிரான போர்நடவடிக்கைகளின்போது முன்னணியில் நின்று செயல்படுகின்றன. 3வது குழு எதிரிகளை அடையாளமே தெரியாதவாறு எவ்வாறு அழிப்பது என்ற பயிற்சிகளை சிறிலங்கா படைவீரர்களுக்கு அளிப்பதில் ஈடுபட்டுள்ளது.

— நியூஸ் டுடே 7.6.86.




கடந்த வாரம் யாழ்ப்பாணம் ஒரு போர்ப் பிரதேசமாகக் காட்சியளித்தது. சிறிலங்காவின் ஆயுதப்படைகள் தமிழ்ப்போராளிகளின் கட்டுப்பாட்டில் இருந்த அந்தப் பிரதேசத்தை பலவந்தமாக தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சி செய்தனர். போராளிகள்மீது விமானம், கடல், தரை ஆகிய 3 மார்க்கங்களிலும் நன்கு திட்டமிடப்பட்ட, ஒருங்கிணைந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. ஆயுதப்படைகளுக்கு எதிராக ஒருவாரகாலமாக நடைபெற்ற நேரடிச் சண்டையில், தமிழர்களது முக்கிய போராட்டச்சக்தியாக விளங்குகின்ற தமிழீழ விடுதலைப் புலிகள் சிறப்பான வெற்றியை ஈட்டியுள்ளார்கள். LTTE இனது எதிர்த்தாக்குதல்கள் மூர்க்கமாக இருந்ததால் ராணுவத்தில் பெரும் இழப்புகள் ஏற்பட்டது. இந்த சண்டையின்போது 75 சிங்கள ராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இது மட்டுமல்லாமல் பாதுகாப்புப்படைகள் அவர்களது முகாம்களுக்குள் திரும்பவும் தள்ளப்பட்டனர். இந்த மூர்க்கமான சண்டையின் முடிவில் யாழ்குடாநாடு தொடர்ந்தும் விடுதலைப் புலிகளது முழுமையான கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருக்கிறது என்ற நிலை மேலும் உறுதியாக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளது பலமானது, கவனமாகத் திட்டப்பட்ட திட்டங்கள், மின்னல் வேகத் தாக்குதல்கள், தாக்கிய இடத்தைவிட்டு விரைவாக நீங்கும் லாவகம் ஆகியவை மூலம் வெளிக்காட்டப்பட்டது. கெரில்லா வீரர்களை வெற்றிகொள்ள முடியாமல், விரக்தியும் ஆத்திரமும் அடைந்த சிங்களராணுவம் நாதியற்ற அப்பாவி பொதுமக்கள்மீது பயங்கரவாதத்தையும், வன்முறையையும் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

TELOவின் மிகப்பெரிய தவறுகளில் ஒன்று என்னவென்றால் இயக்கத்திற்கு ஆட்களை எடுத்தபோது நன்கு ஆராய்ந்து தேர்ந்தெடுக்கவில்லை. இதனால்TELO இனுள் சமூகவிரோத சக்திகள் ஊடுருவின. இந்த சமூகவிரோத சக்திகள் தமது சொந்த நலனுக்காக ஆயுதம் தாங்கிய இயக்கத்தைப் பயன்படுத்தி பொது மக்களை கொள்ளையடிப்பதிலேயே ஆர்வம் கொண்டிருந்தன. TELO இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தமிழ்மக்களின் வெறுப்புக்கு ஆளாகும் வகையில் கோயில்கொள்ளை போன்ற பரந்துபட்ட கொள்ளை நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கினார்கள். ஒரு ஈழவிடுதலை இயக்கம் கொள்ளையர் கூட்டமாக சீர்கெட்டதைக் கண்டு மக்கள் ஆத்திரம் அடைந்தார்கள்.

— டெலிகிராப் 1.6.86.

# THE SUNDAY TIMES

பிரிட்டிஷ் ஹெலிகொப்டர் விமானிகள் இலங்கையின் வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் கெரில்லாக்களுக்கு எதிராக செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு பிரிட்டிஷ் விமானிகள், ஒரு தென்னாபிரிக்கா விமானி உட்பட 3 விமானிகள் திருகோணமலை, யாழ்ப்பாணம், பகுதிகளில் நடத்தப்பட்டு வரும் குண்டு வீச்சுத்தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளார்கள். மேலும் முன்னாள் S.A.S. அதிகாரிகள் தமிழ்ப் போராளிகளின் மறைவிடங்கள் மீதான தரைத்தாக்குதல்களுக்கு தலைமை வகித்துக் கொண்டிருக்கிறார்கள் என ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழப்பாணத்திற்கு அருகிலுள்ள பலாலி விமானதளத்திலும், திருகோணமலையிலுள்ள சீனன் குடா விமானத்தளத்திலும், பெல் 212 [BELL 212] வகை ஹெலிகொப்டர்கள் இலங்கை விமானப்படைக்காக பிரிட்டிஷ் விமானிகளால் ஓட்டப்படுவது நேரடியாக கண்டுபிடிக்கப்பட்டதை தொடர்ந்து பிரித்தானியர் இதில் ஈடுபட்டுள்ளனர் என்பதற்கு நேரடிச் சாட்சியம் கடந்தவாரம் கிடைத்துள்ளது.

சண்டேடைம்ஸ் 11.6.86

# THE TIMES OF INDIA

சிறிலங்காவில் வெளிநாட்டு கூலிப்படையினர் வேலை செய்வது 'தொடர்பான கேள்வியை இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் சரத் முத்தட்டுவேகம பாராளுமன்றத்தில் எழுப்புகையில் 'அவைகள் கட்டுக்கதையல்ல; உண்மையே' என்று கூறினார். அவர்களில் சிலரது பெயர்களைக் குறிப்பிட்டார். மைக் பொலஸ், டேவிட் பட்லர், டிக் பட்சன், சன்டி ரூலிங், மல் மைக்கித். இவர்களுக்கு மாதம் 3.00.000 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகிறது. வெளிநாட்டு கூலிப் பட்டாளமான 'கினிமினி' ஸ்தாபனத்திற்கு இங்கே என்ன வேலை என்றும் கேட்டுள்ளார்.

— டைம்ஸ் ஆப் இந்தியா 26.4.86.

## அஞ்சலி

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினரும், பாராளுமன்ற உறுப்பினருமான திரு. சரத் முத்தட்டுவேகம 18.5.86. அன்று அகால மரணமடைந்தார்.

ஒடுக்கப்பட்டு வரும் தமிழ்மக்களது கோரிக்கைகளில் உள்ள நியாயத்தை உணர்ந்தவர் அவர். பாராளுமன்றத்தில் தமிழர்களது உரிமைகளுக்காக ஓங்கி ஒலித்த குரல் அவருடையது. சிங்கள அரசின் இனவெறியையும், முதலாளித்துவப் போக்குகளையும், அந்நிய நாடுகளின் தலையீட்டையும் அம்பலப்படுத்தி வந்தார். ஒடுக்கப்பட்ட சிங்கள, தமிழ் மக்களது பிரதிநிதியாகத் திகழ்ந்த சரத் இன்று நம்மிடையே இல்லை.

தோழர் சரத் அவர்களுக்கு எமது இறுதி அஞ்சலியையும், அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

## நேபாம் குண்டுகள்

சிறிலங்காவின் அடக்குமுறை ஆட்சியாளர்கள் அப்பாவித் தமிழர்கள் மீதான தமது தாக்குதல்களை காலத்துக்குக் காலம் பல புதிய யுக்திகளை கையாள்வதன் மூலம் மிக மோசமாக நடத்தி வருகின்றார்கள். தரை, கடல், ஆகாய மார்க்கமாக பல நவீனரக ஆயுதங்களைப் பயன்படுத்தி தமது இனப்படுகொலை திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். தற்போது விமானத் தாக்குதல்களில் மேலும் ஒருபடி முன்னேறியுள்ளது. சிங்கள இனவெறி அரசு. தொடர்ச்சியான எமது அதிரடித் தாக்குதல்களினால் ஆட்டம் கண்டுள்ள ஆட்சியாளர்கள் அப்பாவித் தமிழர்கள் மீதான விமானக் குண்டு வீச்சுகளில் இரசாயனக் குண்டுகளை பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். 'நேபாம்' என அழைக்கப்படும் இரசாயனக் குண்டுகள் விழுந்ததும், வெடித்து எரியக் கூடியன. இக் குண்டுகள் வீசப்பட்டதால் வல்வெட்டித்துறையில் பலவீடுகள் தீப்பற்றி எரிந்தன. இப் பயங்கரமான குண்டுகள் யாழப்பாணப் பிரதேசத்தில் வீசப்பட்டமை இதுவே முதல் தடவையாகும்.


கடந்த 9.6.1986 அன்று வல்வெட்டித்துறை இராணுவ முகாமில் இருந்து ஆயுதப்படையினர் வெளியே வர முயன்றபோது ஆரம்பித்த சண்டை 14.6.1986 வரை நீடித்தது. தரையில் அவர்களது முன்னேற்றம் விடுதலைப் புலிகளது எதிர்தாக்குதலால் தடைப்பட்டதைத் தொடர்ந்து முகாமுக்கு பின்வாங்கிய ஆயுதப் படையினர் முகாமிற்குள் இருந்து குடிசைப்பகுதிகள் மீது பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர். மோட்டார் குண்டுகள் வீசப்பட்டன. கடலில் இருந்து பீரங்கிப்படகுகள் குண்டுகளைத் தீர்த்தன. வானத்தில் இருந்து விமானங்கள் குண்டு மழை பொழிந்தன. இதில் பல நூற்றுக் கணக்கான வீடுகள் பலத்த சேதமடைந்தன. 70க்கும் மேலான பொது மக்கள் படுகாயமடைந்தனர். இரண்டு சிறுவர்கள், 16 வயதுப் பெண் ஒரு முதியவர் உட்பட 9 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

'நேபாம்' குண்டுகளை யுத்தத்தில் பயன்படுத்துவது சர்வதேச விதிகளுக்கு முரணானது. யுத்தம் தொடர்பான ஜெனிவா உடன்படிக்கையில் நேபாம் குண்டு தடை செய்யப்பட்டுள்ளது. இக் குண்டுகள் விழுந்ததும் பரந்த இடப் பரப்பில் உடனே தீப்பற்றும். 800° சென்டிகிரேட் வெப்பத்தில் பொருட்கள் தீப்பற்றி எரியும். இதை எளிதில் அணைக்கவும் முடியாது. அணைப்பதற்கு இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தினால் இன்னும் அதிகமாகப் பற்றிஎரியும். நீர், மண் என்பவைகளைப் பயன்படுத்தி தீ பரவாமல் தடுக்கலாம். நேபாம் குண்டினுள் உள்ள திரவம். ஓடும் இடம் எல்லாம் தீ பரவும். பட்ட இடமெல்லாம் பற்றி எரியும். தீயினுள் அகப்பட்டவர்கள் கருகி எரிவதோடு திராவகத் தெறிப்பினால் உண்டாகும் எரிகாயமும் ஆழமானதாக இருக்கும்.

ஸ்பெயினில் இருந்து வரவழைக்கப் பட்டதாகக் கருதப்படும் இந்த நேபாம் குண்டுகள் பெருமளவு உயிரிழப்பை உண்டுபண்ண, வீடுகள் பொருட்கள் ஆகியவைகளை அழிக்க, மக்கள் மத்தியில் கிலி ஏற்படுத்த பயன்படுத்தப் படுகின்றன.

இன்று வரை உலகில் நடைபெற்ற போர்களின் போதான விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலில் ஏற்பட்ட உயிரிழப்புகளில் 60 சதவீதமும், இரண்டாம் உலகப் போரில் 80 சதவீதமும் இத்தகைய எரியூட்டு குண்டுகளால் ஏற்பட்டவை.

விடுதலைப் புலிகள் இதழுக்கு அன்பளிப்பு செய்ய விரும்புவோரும் சந்தா கட்ட விரும்புவோரும் A. இராஜாராம் என்ற பெயருக்கு காசோலை மூலமாகவோ மணியார்டர் மூலமாகவோ பணம் அனுப்பலாம். சந்தா ரூ. 25. தபால் பெட்டி 926. அடையார். சென்னை 600 020








www.eelamview.com

www.eelamview.com

# லிங்கத்தின் மறைவு



# விடுதலைப்போரில் திருப்புமுனை

லிங்கம் 16-12-60ல் வல்வெட்டித்துறையில் பிறந்தார். இயற்பெயர் செல்வகுமார். இந்துக்கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் ஆதரவாளரானார். 1980ம் ஆண்டில், 12ம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோது இயக்கத்தின் உதவியாளராகச் செயல்பட ஆரம்பித்தார். எமது விடுதலை குறித்து சுவரொட்டிகளை ஒட்டுதல், சுலோகங்களை சுவர்களில் எழுதல் போன்ற வேலைகளை ஆர்வத்துடன் செய்தார். விடுதலைப் போராட்டத்தில் மக்கள் அதிகம் ஈடுபாடு காட்டாத அவ்வேளையில், விடுதலைப் புலிகளை வேட்டையாட இரகசியப் பொலிஸார் மோப்பம் பிடித்துக் கொண்டிருந்த வேளையில் சுவரொட்டி ஒட்டுதல் போன்ற வேலைகளைக்கூட மிகவும் சிரமங்களுக்கிடையிலும், கைதாகும் ஆபத்துக் கிடையிலும் செய்தார். 1981ல் முழுநேர உறுப்பினரான லிங்கம் யாழ்ப்பாணத்தில் அரியாலைக் சனசமூக நிலையத்தில் உடற்பயிற்சிகளைப் பெற்றார். சிறந்த போர்வீரனாக வரவேண்டும் என்ற ஆர்வத்தில் 'கராட்டே' பழகி பிரவுன் பட்டிக்குத் தகுதி பெற்றார்.

1982ல் தலைவர் பிரபாகரனை லிங்கம் சந்தித்தபின் பிரபாகரனின் ஆகர்ஷிப்பில் அமிழ்ந்து போனார். அவருக்கும், இயக்கத்துக்கும் விசுவாசமாக நடப்பதே தன் கடமை என உணர்ந்து இயக்க வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டார். 1982ம் ஆண்டின் கடைசிப் பகுதியிலும், 1983ம் ஆண்டின் முதற் பகுதியிலும் வன்னிப் பகுதியில், ஒரு காட்டில் அவருக்கு இராணுவப் பயிற்சி அளிக்கப்பட்டது. அங்கு கடப்பழகிக் கொண்டார். கடுமையான பயிற்சிகளையும் மிகுந்த ஆர்வத்துடன் செய்தார். குறிதவறாது சுடுவதில் திறமையைக் காட்டினார். A.K. கரிகுழல் துப்பாக்கி அவருக்கு விருப்பமான ஆயுதம். தலைவர் பிரபாகரனுடன் போட்டி போட்டுக் கொண்டு துப்பாக்கி சுடுவதில் முனைந்து நிற்பார். 300 யார் உயரத்தில் பறந்து கொண்டிருந்த பருந்தொன்றினை தனது A.K. கரிகுழல் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தியமை அவரது சுடும் திறமைக்குச் சான்றாகும்.

சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட பல மோதல்களில் பங்கேற்றுக் கொண்டார். தாக்குதல்களின் போது முன்னின்று சண்டையிடுவார். ஜூலை 1983ல் திருநெல்வேலியில் விடுதலைப் புலிகள் 13 இராணுவ வீரர்களைக் கொன்றொழித்த அத்தாக்குதலில் லிங்கத்தின் பங்கு குறிப்பிடத்தக்கது.

1984ம் ஆண்டு மதுரையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பொறுப்பாளராக கடமையாற்றினார். அக்காலத்தில் அரசியல் பிரச்சாரத்தை திறம்பட நடத்தி, தமிழக மக்களுடன் மிகுந்த நல்லுறவை வளர்த்துக் கொண்டார். 1985ம் ஆண்டுக் காலத்தில் தமிழீழக் காடுகளில் இருந்த பயிற்சி முகாம் ஒன்றின் பொறுப்பாளராகச் செயல்பட்டார். அக்காலத்தில் விசேஷ பயிற்சி பெற்று விடுதலைப் புலிகளின் அதிரடிப்படைப் பிரிவு காப்டன் ஆனார். தலைவர் பிரபாகரனின் மிக நெருங்கியவர்களில் ஒருவராகவும், உதவியாளராகவும், மெய்க்காப்பாளராகவும் செயல்பட்டார்.

தமிழ் நாடு காமராஜர் காங்கிரஸ் தலைவர் நெடுமாறனும், பின்னர் பிரெஞ்சுப் பத்திரிகையாளர் இருவரும் தமிழர் படும் துன்பங்களையும், அரச பயங்கரவாதத்தையும் அறிந்து வர தமிழீழம் சென்றபோது அவர்களின் பயணப் பொறுப்பு லிங்கத்திடமே கொடுக்கப்பட்டது. லிங்கம் தமது கடமையை பூரணமாக நிறைவேற்றினார்.

லிங்கம் இயக்க உறுப்பினர்கள் ஒவ்வொருவருடனும் சகஜமாகப் பழகியிருந்ததால் எல்லோரும் அவரிடம் அன்பு கொண்டிருந்தனர். கடமை என்று வரும் போது கண்டிப்பானவராகி விடுவார். அப்படிக் காட்டிக்கொள்வதற்காக முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டு கடுகடுப்பாக பேச முயன்றாலும், வெகுளித்தனம் தான் வெளியே தெரியும். கடைசியாகக் கடந்த மார்ச் மாதம் தமிழ் நாட்டிலிருந்து சென்றபோது தனது தோழர்களைப் பிரிந்த வேளையில் கண்களில் நீர் வழிய விடைபெற்றார். புதியவர்கள் அக் காட்சியை ஆச்சரியத்துடன் பார்த்தனர். அவரைப் புரிந்தவர்கள் கேலி செய்து சமாதானப் படுத்தினர்.

கட்டையான தோற்றம், தீட்சண்யமான கண்கள்; தடிப்பான மீசை; மெதுவான, உறுதியான நடை; அவரது குட்டையான உருவம் குறித்து அவரது நண்பர்கள் கேலி செய்வார்கள். அவர்களுடைய உரையாடலுக்கிடையே ஏதாவது லிங்கம் கூற முனைந்தால் 'நீ சின்னப் பொடியன்; அங்கால போ' என்று வேடிக்கையாகக் கூறிச் சிரிப்பார்கள். நண்பர்களின் கேலிப் பேச்சுகளை ரசிப்புடன் ஏற்றுக் கொள்வார்.

* * *

27-4-86 அன்று சிறிலங்காவின் கடற்படையுடன் மோதலில் ஈடுபட்ட மேஜர் அருணாவும் அவருடன் கூடச் சென்ற விடுதலைப் புலி வீரர்களும் தளம் திரும்பவில்லை. அவர்கள் அனைவரும் இறந்து விட்டதாகக் கருதிய தமிழீழ மக்கள் 28-4-86 அன்று அவர்களுக்குக் கண்ணீர் அஞ்சலி செலுத்தினர். தமிழீழமெங்கும் தோரணங்கள் கட்டப்பட்டன. கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டன. மேடைகள் அமைத்து அருணாவின் படத்தை வைத்து மக்கள் வீரவணக்கம் செய்தனர். ஒலி பெருக்கிகள் அவரது வீரவரலாற்றை முழங்கின. எவரது தூண்டுதலுமின்றி மக்கள் எழுச்சி பெற்று தமிழீழ விடுதலைப் புலி வீரர்களுக்கு ஏகோபித்த ஆதரவைத் தெரிவித்தது கண்டு எரிச்சலடைந்தனர் டெலோவினர். 24-4-86ல் கடலில் இறந்த டெலோ உறுப்பினர்களின் பொருட்டு மக்கள் எதுவித அனுதாபமும் தெரிவிக்கவில்லை. 29-4-86 அன்று ஹர்த்தால் செய்து இறந்த தமது தோழர்களுக்கு அஞ்சலி செலுத்துமாறு மக்களைப் பலவந்தப் படுத்தினர். இக்கட்டாய ஹர்த்தாலை மக்கள் ஏற்கவில்லை. தாம் ஒழுங்கு செய்த ஹர்த்தாலுக்கு மக்களிடமிருந்து எவ்வித ஆதரவும் இல்லாதது கண்டு ஆத்திரமடைந்தனர் டெலோவினர். தமது கோட்டையாகக் கருதிய கல்வியங்காட்டுப் பகுதியிலேயே மக்கள் விடுதலைப் புலிகளுக்கு அமோக ஆதரவளித்தது கண்டு புழுங்கிய டெலோவினர் மக்களைப் பயங்கரமாகத் தாக்கினர். அருணாவின் படம் வைத்திருந்த அஞ்சலி மேடைகளை உடைத்தெறிந்தனர். அருணாவினதும் மற்றும் தோழர்களினதும் படம் போட்ட சுவரொட்டிகளைக் கிழித்தெறிந்தனர். மக்கள் அராஜக வாதிகளினால் தாக்கப்படுவதைத் தடுக்கச் சென்ற மேஜர் பசீரும் லெப்டினண்ட் முரளியும் டெலோவால் கடத்தப்பட்டனர். கடத்திச் சென்று கொல்வது டெலோவினருக்கு கைவந்த கலை. தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய ஆலாலசுந்தரம், தர்மலிங்கம் ஆகியோர் டெலோவால் கடத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர். திருச்சி அகதிகள் முகாமிலிருந்து 3 அகதிகள் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டனர். பேச்சு வார்த்தைக்கென அழைத்து வஞ்சகமாகக் கொல்வதில் வல்லவர்கள் டெலோவினர். டெலோவின் ராணுவத் தளபதியான தாஸையும் அவரது 3 தோழர்களையும் பேச்சுவார்த்தைக்காக யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு அழைத்துச் சுட்டுக் கொன்றனர். வைத்தியசாலைகளைத் தாக்குதலுக்குள்ளாக்குவது சர்வதேச சட்டங்களுக்கு முரணான செயல். மனித நாகரீகத்துக்கே இழுக்கானது. அங்கு நின்ற ஒரு தாதி உட்பட பல நோயாளிகளுக்கு காயம் ஏற்பட்டதுடன், நீதிபதி ஒருவரும் கொல்லப்பட்டார். மறுநாள் இப்படுபாதகச் செயலை எதிர்த்து ஊர்வலம் சென்ற பொதுமக்கள் மீது டெலோவினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மூவர் இறந்தனர். மேஜர் பசீரும், லெப்டினண்ட் முரளியும் கொலை செய்யப்படலாம் என்று உணர்ந்த எமது தலைமைப்பீடம் பேச்சுவார்த்தை மூலம் அவர்களை விடுதலை செய்விப்பதற்காக லிங்கத்தை அனுப்பியது. சிறி சபாரத்தினமும் அவரது ஆட்களும் தங்கிருந்த கல்வியங்காட்டில் உள்ள டெலோவின் தலைமையகத்திற்கு லிங்கம் ஆயுதமேந்தாது சென்றார். சமாதானத் தூதுவனாகச் சென்ற லிங்கம் துப்பாக்கியால் கண்ணில் சுடப்பட்டு படுபாதகமான முறையில் கொல்லப்பட்டார்.

லிங்கத்தின் வீரமரணம் விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது . போராட்டக் களத்தில் போராடிக் கொண்டிருக்கின்ற விடுதலைப்புலிகளின் முதுகில் குத்திக் கொண்டிருந்த டெலோ மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இரு மூத்த உறுப்பினர்கள் கடத்தப்பட்டு அவர்கள் கொல்லப்பட்டு விடுவார்கள் என்ற நிலையில், காப்டன் லிங்கம் கொல்லப்பட்ட நிலையில் விடுதலைப் புலிகளை அழிக்க முற்பட்ட டெலோமீது தற்காப்பு யுத்தம் தொடுக்க வேண்டிய கட்டாயத்துக்குள்ளானார்கள் விடுதலைப்புலிகள். நாசகார சக்திகளின் கைப்பொம்மையாக, எதிர்ப்புரட்சி அமைப்பாக, விடுதலைப் போருக்கு முட்டுக்கட்டையாக செயல்பட்டு வந்தது டெலோ. மக்கள் விரோத நடவடிக்கைகளான கோவில் கொள்ளைகள், வாகனக் கடத்தல்கள் போன்றவற்றில் ஈடுபட்டு விடுதலைப் போராட்டத்தின் மீது மக்கள் வெறுப்புக் கொள்ளும்படி செய்தனர். இஸ்லாமிய மக்களைத் தூண்டிவிட்டு மதரீதியான சண்டைகளை தமிழ் மக்களிடத்தில் ஏற்படுத்தியவர்கள் இவர்கள்தான். சமூக விரோதக் கும்பலை வளர்த்து அதற்குத் தலைமை தாங்கிய கொள்கையற்ற, பொறுப்பற்ற டெலோ தலைவர்களுக்கு எதிராக எடுத்த நடவடிக்கையின் போது சொந்த இரத்தத்தையே சிந்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. இந்த நிலைக்கு காரண கர்த்தாக்களாக இருந்த டெலோ தலைமை தண்டிக்கப்பட்டபோது மக்கள் எமது செயலை ஆதரித்தனர்; பாராட்டினர்; ஒத்துழைத்தனர். டெலோவின் அழிவினால் தமிழீழப் போராட்டம் உறுதியான ஒரு தலைமையின் கீழ் மேலும் பல மடங்கு பலம் அடைந்திருக்கிறது. தமிழீழ விடுதலைப்புலிகள் தனித்த பெரும் சக்தியாக உருப்பெற்று சிறிலங்காவின் முப்படைத் தாக்குதல்களை முறியடித்து வெற்றி கண்டது இதன் நேரடி விளைவாகும். இதனை எதிரிகள் உட்பட உலகமே ஒத்துக் கொள்கிறது.

சிங்கள இராணுவத்துடன் பொருதச் சென்ற லிங்கம் துரோகிகளால் கோழைத்தனமாகக் கொல்லப்பட்டார். தமிழீழப் போராட்டம் முன்னெடுக்கப்படுவதற்கு காரணமாக நேற்றிருந்த லிங்கம் இன்றில்லை. நாளையும், அதற்கு அடுத்து வருகின்ற காலங்களிலும் லிங்கம் எமது வரலாற்றோடு வாழப் போகிறார்.



புத்தனின் வதனம் முறுவலித்தது
சிகரங்களின் பனி விளிம்புகளில்.

கருணை உருகி காலங்களினூடே ஓடியது.
சரித்திரத்தின் கறைகளில் கலங்கிக் கடலில் கலந்தது.

ஆணவம்— அம்பாகி, குண்டாகி, அணுவாகி—
சமூகத்தின் கரைகளில் அலை மேல் அலையாக விழுகிறது.

***

உன்னதம் ஒரு போதும் சமூகத்துக்கல்ல.

***

அசோகனின் மனம் மரண ஓலங்களில்
வாழ்வின் அர்த்தத்தை தரிசித்தது.

உயிர் ராசிகளனைத்தையும் நேசிக்கச் சொல்லி
லங்காபுரி சேர்ந்தான் மகிந்தன்.

***

எல்லோருமே வாழ்வதற்காகப் போராட வேண்டியிருக்கிறது.

***

காற்று வெடி மருந்துப் புகையாயிற்று.
விடுதலையைச் சுவாசிக்கத் துவக்கெடுத்தேன்.

காலம் என் உயிரைக் குப்பியில்* அடைத்து
என் கையிலேயே கொடுத்தது.

மரணம் தன் குகைக்குள் அழைக்கிறது.
விடை பெறுகிறேன் நம்பிக்கையுடன்—
அடுத்த தலைமுறைக்காவது உயிர் மிஞ்சட்டும்.

***

அன்பு மகத்தானது.

—யாழ் சித்தார்த்தன்.

* cyanide

www.eelamview.com

